வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 22.09.2021 புதன்கிழமை | இதழ் : 291 | பக்கங்கள் : 16




# இறுதிப்போர் படுகொலைகளுக்கு ஐ.நாவும் பொறுப்பு கூறவேண்டும்

## சபையில் வலியுறுத்தினார் சிறிதரன் எம்.பி

கொழும்பு, செப்ரெம்பர் 22

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ. நா. செயலரிடம் கூறியதன் மூலம் ஓமந்தையில் வைத்து கண்கண்ட சாட்சிகளுடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், இந்த நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டு விட்டனர் என்றா ஜனாதிபதி ஐ. நாவில் கூறுகின்றார்? உள்ளக விசாரணை என்ற பெயரில் கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பதுதான் இந்த உலகின் நீதியா? எனக் கேள்வி எழுப்பிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம். பியான எஸ்.சிறிதரன், போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களை நடுத்தெருவில் கைவிட்டு வெளியேறிய ஐ.நாவும் அதன் சர்வதேச நிறுவனங்களும் இந்த படுகொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். 15

## நாட்டில் கொரோனாவால் மேலும் 66 பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 22

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பலனின்றி மேலும் 66 பேர் உயிரிழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12,284 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஒரு மாதத்துக்குப் பின்னர் நாளொன்றில் பதிவான மிகக் குறைவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் 31 தொற்றாளர்கள்!

### மருத்துவமனை ஆய்வகம்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 31 பேர் உட்பட வடக்கில் 56 தொற்றா 15

## வல்வெட்டிதுறை நகர சபை தவிசாளர் தெரிவு இன்று!

வடமராட்சி, செப். 22

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தவிசாளர் தெரிவு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நகர சபை மண்டபத்தில் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறும் தவிசாளர் தெரிவில், இலங்கை தமிழ் அரசு கட்சி (தமிழ்த் தேசியக் 15

## விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதை ஏற்கவேமுடியாது

### தெரிவுக்குழுவில் மனோ திட்டவட்டம்

கொழும்பு, செப். 22

இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட நிலையில், மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல் முறைகளை கலப்பு முறைக்கு மாற்றி, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களையும் ஒழித்து, மாகாண சபை, பாராளுமன்ற மக்கள் மன்றங்களை மேலும் 15

## வடக்கில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88,000 பேர் எந்த தடுப்பூசியும் பெறவில்லை

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 22

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88,000 பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் தடுப்பூசி செலுத்தும் பணி இடம் பெற்று வரும் நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி 15

## நேற்று 1,351 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 22

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும்1,351 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று 15

## அமைச்சர் சரத் வீரசேகர ஹிட்லரை போன்றவர்!

### பெரமுன எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 22

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஹிட்லரை போன்று செயல்படுகிறார் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து 15

## பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதான வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

### பாராளுமன்றத்தில் கஜேந்திரன்

கொழும்பு, செப்.22

“இந்த அரசாங்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பயங்கரவாத சட்டத்தை நீக்குவோம் என்று ஜெனிவாவில் வாக்குறுதியளித்திருந்தது. ஆனால், அந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. அதனை நீக்க வேண்டும் என்று ஐ.நா. கூறியுள்ளது. இன்னும் அந்த சட்டத்தில் தடுத்து வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும்” என தமிழ்த்தேசிய 15



## இப்படியும் நடக்கிறது...!

அவர் ஒரு மூத்த தமிழ் அரசுக்காரர். தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழ் அரசுக் கட்சி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று தந்தை செல்வாவுடன் தொடர்ந்து பயணித்த ஒருவர்.

வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தவர் என்னைக் கண்டதும் நிறுத்தி நலம் விசாரித்தார்.

தமிழ் அரசுக் கட்சியைப் பற்றி கொஞ்ச நாட்கள் என்றாலும் இந்தப் பத்தியில் எழுதுவதைத் தவிர்க்கவேண்டும் என்று நினைத்தாலும் மனசு கேட்பதாக இல்லை.

தமிழ் அரசில் தற்போது நடக்கும் ‘திருக்கூத்துக்கள்’ பற்றி அவர் என்ன அபிப்பிராயத்துடன் இருக்கிறார் என்று அறிந்துகொள்ள ஆசை.

“ஐயா தமிழ் அரசில் இப்படியெல்லாம் நடக்கின்றதே நீங்கள் மூத்த கட்சிக்காரர் பார்த்துக்கொண்டிருந்தால் எப்படி?’ என்று கேட்டேன்.

அவர் படக்கென்று பதில் சொன்னார்.

“அதில் என்ன தம்பி, ஆனந்தசங்கரியின் கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருப்பதுபோல, ...... அவரின் கைகளுக்கு தமிழ் அரசு போய்விடும். அவரும் ஆனந்தசங்கரியைப்போல யாரும் கண்டுகொள்ளாத ஆளாக கட்சியையும் அதன் கொடி சின்னங்களையும் வைத்துக்கொண்டு கடைசிவரை இருக்கப்போகிறார்”, என்று சர்வசாதாரணமாக ஆரூடம் சொன்னார்.

இதற்கு முன்னரும் அரசியலில் இப்படித்தான் நடக்கும் என்று அவர் சொன்னது அப்படியே நடந்ததை அவருக்கு ஞாபகப்படுத்திவிட்டு விடைபெற்றேன்.

தமிழ் அரசுக் கட்சிக்கு பெரும் அரசியல் பாரம்பரியம் இருக்கின்றது என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல, அது தந்தை செல்வாவிலேயே மூடிக்கட்டிவைக்கப்பட்டது என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

தமிழர் அரசியிலில் தமிழ் அரசும் தமிழ்க் காங்கிரஸும் இரு துருவங்களாக அரசியல் நடத்திக்கொண்டிருந்தபோது, ஆளும் வர்க்கம் இரு கட்சிகளையும் மிக சுலபமாக கையாண்டுகொண்டிருந்தது.

இனியும் தமிழர்கள் பிரிந்திருக்கக்கூடாது என்பதை உணர்ந்துகொண்ட தந்தை செல்வா, தமிழ் அரசையும் தமிழ்க் காங்கிரஸையும் ஓரணிக்கு கொண்டுவர முயன்று அதில் வெற்றியும் பெற்றார். தமிழ் அரசு கட்சியை பெட்டிகட்டி வைத்துவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார் தந்தை செல்வா. அதற்காக அவர் முன்வைத்த தமிழீழக் கோரிக்கை விமர்சனத்திற்குரியது என்றாலும், அந்தக் கோரிக்கைக்கு மக்கள் அளித்த அமோக ஆதரவே பின்னர் தமிழ் இளைஞர்கள் தமிழீழம் கோரி ஆயுதங்களைத் தூக்க காரணமாகியது. அவை எல்லாம் சரியா பிழையா என்பதை ஆராய புறப்பட்டால் அது ஒரு தொடர்கதையாகிவிடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தபோது தந்தை செல்வாவுடன் கைகோர்த்த அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் மறைந்துவிட அவர் புதல்வர் குமார் பொன்னம்பலம் அடுத்து வந்த பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டையில் கேட்கமுடியாது என்று கூட்டணியை உடைத்துக்கொண்டு தமிழ்க் காங்கிரஸில் தனித்துப் போட்டியிட்டு தோற்றுப்போனமையும், அவர் உயிரோடு இருக்கும்வரை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அவரால் வெற்றிபெறமுடியாமல் போனமையும் பழைய வரலாறுகளாகிவிட்டன.

பின்னாளில் விடுதலைப் புலிகளும் தந்தை செல்வா நினைத்ததுபோலவே பிரிந்து கிடந்த தமிழ் அரசியல் கட்சிகளையெல்லாம் ஒன்றிணைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது புலிகளாலேயே துரோகிகளாக்கப்பட்ட ஆயுத இயக்கங்களின் அரசியல் கட்சிகளைக்கூட வன்னிக்கு அழைத்து ஒரே மேசையில் இருத்தி ஒரு பலமான அரசியல் இயக்கமாக புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். இப்படி உருவாக்கியபோது, தமிழ் அரசு களத்தில் இருக்கவே இல்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆனந்தசங்கரி ஐயாவின் தனிச் சொத்தாக மாற, கூட்டமைப்பிற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒரு கட்சி தேவை என்பதால் பூட்டிவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசின் திறப்பு தேடி எடுக்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இவை எல்லாம் வரலாறுகள். ஆனாலும், தமிழ் அரசின் நிலை இருக்கட்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதே நிலை வந்தால், புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதுபோல, அவர்களின் அரசியல் வியூகமும் மௌனிக்கப்பட்டுவிடும். அதனைத்ததான் சில தலைவர்கள் செய்ய விளைகின்றார்களோ என்று இந்த வேளையில் கேட்காமலும் இருக்கமுடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# “கணவரின் கழுத்தை காதலர் காலால் அழுத்த நானே திருகுவளையால் அடித்து கொன்றேன்”

## அரியாலை கொலை சந்தேகநபரான பெண் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், செப். 22

கணவரின் கழுத்தை காதலர் காலல் அழுத்திப் பிடிக்க நான் திருகுவளை கட்டையால் தலையில் அடித்துக் கொன்றேன் என்று அரியாலை - பூம்புகாரில் இடம்பெற்ற கொலையின் முதல் சந்தேகநபரான கொலையானவரின் மனைவி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவரின் காதலர் என்று கூறப்படும் நபர் மீது 40இற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கொள்ளை, திருட்டு மற்றும் பாலியல் வன்புணர்வு குற்றங்களுடன் தொடர்புடையவை என்றும் பொலிஸார் கூறினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை திருகுவளையால் தலையில் தாக்கப்பட்டு குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார். அச்சுவேலி தெற்கை சேர்ந்த பூம்புகாரில் வசித்து வருபவருமான துரைராசா செல்வகுமார் (வயது 32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் கொலையானவரின் மனைவியும், அவரின் காதலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டு நேற்று முன்தினம் இருவரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

## 104 கிலோ கஞ்சா மன்னாரில் சிக்கியது!

மன்னார், செப். 22

மன்னார் - இலுப்பைக்கடவை - கத்தாளம்பிட்டியில் மறைத்து வைக்கப்பட்ட கஞ்சாவை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

நான்கு மூடைகளில் பொதியிடப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட 104 கிலோ 750 கிராம் எடை கொண்ட கஞ்சாவே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## களஞ்சியசாலைக்கு மன்னாரில் ‘சீல்’

மன்னார், செப். 22

மன்னாரில் சிமெந்து பதுக்கி வைக்கப்பட்ட களஞ்சிய சாலை ஒன்றுக்கு நேற்று சீல் வைக்கப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சோதனையின்போதே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி பெரியகமம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு அருகாமையில் உரிய அனுமதி பத்திரமின்றி சீமெந்து பதுக்கி வைக்கப்பட்ட களஞ்சியசாலையே இவ்வாறு சீல் வைத்து மூடப்பட்டது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**15.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி TV CHANNEL - 2

**15.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
22.09.2021 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தேர்தல் வெற்றியும் ஆளுமையும்?

சில தினங்களுக்கு முன்னர் டான் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றின் போது, தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருந்த கருத்துக்கள் பலராலும் அதிருப்தியுடன் நோக்கப்பட்டிருந்தன. அவரின் வயதுக்கும் அவர் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கும் இடையில் காணப்பட்ட பெரிய இடைவெளியே இதற்கான காரணமாகும். சுரேஷ் பிறேமச்சந்திரன், சிறிகாந்தா போன்றவர்களை ஆளுமையானவர்கள் என்று நேர்கண்டவர் குறிப்பிட்டபோது, அவர்களுக்கு ஆளுமை இருந்திருந்தால் அவர்களை மக்கள் ஏன் நிராகரித்தார்கள்? ஆளுமை இருந்திருந்தால் மக்கள் ஏற்றுக்கொண்டல்லவா இருந்திருப்பார்கள்! இதனை அவர் அறியாமலும் கூறியிருந்திருக்கலாம் ஆனால், ஆளுமைக்கும் தேர்தல் வெற்றிக்கும் தொடர்பிருக்கின்றதா என்னும் கேள்வியை ஆராய வேண்டிய கடப்பாடு நமக்குண்டு.

2013இல் இடம்பெற்ற வடக்கு மாகாண சபை தேர்தலில் நீதியரசர் விக்னேஸ்வரன் 130,000இற்கும் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்று வெற்றிபெற்றிருந்தார். ஆனால், கடந்த பாராளுமன்ற தேர்தலில் அதே விக்னேஸ்வரனால் அரும்பொட்டில் 35,000 அளவிலான வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. இதனை விக்னேஸ்வரனின் ஆளுமையுடன் தொடர்புபடுத்தலாமா? ஏனெனில், 130,000 வாக்குகள் போடப்பட்ட போது அவரிடம் என்ன ஆளுமையிருந்ததோ, அதே ஆளுமைதான் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட போதும் இருந்தது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பிற்கு யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்கள் மட்டுமே கிடைத்திருந்தன. அதில் ஆளுமைமிக்கவர் என்று கருதப்படும் சுமந்திரனும் ஒருவர். ஆனால், தனது தேர்தல் வெற்றி தொடர்பில் அச்சமடைந்திருந்த சுமந்திரன், வெற்றிக்காக சிவஞானம் சிறிதரனுடன் தேர்தல் வியூக கூட்டமைத்திருந்தார். தனது ஆளுமைமீது மட்டும் சுமந்திரனுக்கு நம்பிக்கை இருந்திருந்தால், சிறிதரனுடன் கூட்டமைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் சுமந்திரன் - சிறிதரன் தேர்தல் கூட்டு, ஆளுமைக்கும் தேர்தல் வெற்றிக்கும் ஒரு தொடர்புமில்லை என்பதற்கு இந்த ஓர் உதாரணம் போதுமானது.

1994இல், இப்போதைய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், திருகோணமலை தொகுதியில் தோல்வியடைந்தார். அவருடன் போட்டியிட்டிருந்த தங்கத்துரையே அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார். சம்பந்தனுடன் ஒப்பிட்டால் தங்கத்துரை ஆளுமைமிக்கவர் அல்ல. சம்பந்தனின் சட்டப்புலமை, ஆங்கிலமொழி புலமை என்பவற்றுடன் ஒப்பிட்டால், தங்கத்துரையிடம் குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. ஆனால், தேர்தலில் சம்பந்தனை அவர் தோற்கடித்தார். ஆளுமைக்கும் தேர்தல் வெற்றிக்கும் ஒருவித தொடர்புமில்லை என்பதற்கு இதுவும் ஒரு சிறந்த உதாரணம்.

ஒருவரின் தேர்தல் வெற்றியில் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மக்களுடன் ஒருவர் கொண்டிருக்கும் தொடர்ச்சியான ஊடாட்டம், ஒருவரின் ஊர் மற்றும் சாதித் தொடர்புகள், பணம் அத்துடன் வியூகம் இத்தனையும் கச்சிதமாக சேருகின்றபோதுதான், வெற்றியை ஒருவர் தட்டிப் பறிக்கின்றார். மக்கள் மத்தியில் பெரியளவில் அறிமுகம் இல்லாவர்கூட, ஒரு சிறந்த வியூகத்துடன் பணத்தையும் இணைத்து தனக்கான வெற்றியை பெற்றுவிட முடியும். அதற்கான வாய்ப்பு இந்த தேர்தல் களத்தில் இருக்கின்றது. இந்த நிலையில் தேர்தலில் தோல்வியுற்றவர்களை ஆளுமையற்றவர்கள் என்று குறிப்பிடுவதானது ஒருவரின் அரசியல் முதிர்ச்சியின்மையையே காண்பிக்கும்.

சம்பந்தன் ஒரு பெருந் தலைவராக வெளியில் வந்தமைக்கு கூட்டமைப்பின் உருவாக்கமே பிரதான காரணம். ஆனால், அந்த கூட்டமைப்பு சம்பந்தனின் ஆளுமையால் உருவாக்கப்படவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளின் தலையீட்டால் உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அன்று சம்பந்தனை ஏற்றுக்கொள்ளாது விட்டிருந்தால், இன்று சம்பந்தன் ஒரு பெரும் தலைவராக இருந்திருக்க முடியாது. அந்த வகையில் இன்று சம்பந்தன் பெருந் தலைவராக இருப்பதற்கு அவரின் ஆளுமையல்ல காரணம். மாறாக, விடுதலைப் புலிகள் அமைப்பு அவரை உள்வாங்கி, வழங்கிய அங்கீகாரமே காரணமாகும்.

# ஜனாதிபதியின் அழைப்பு!

- அலசுவது இராஜதந்திரி -



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸை நியூயோர்க் நகரில் சந்தித்து பல வாக்குறுதிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார். அத்துடன், ஐ. நா. செயலாளரிடம் பேசியபோது புலம்பெயர் தமிழர்களை பேச்சுகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதோடு உள்ளக ரீதியான ஏற்பாட்டுடன் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காணத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்ற தறுவாயில் இலங்கைக்கு அன்றைய ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை அரசு யுத்தத்துக்குப் பின்னர் முன்னெடுக்கப்போகின்ற மனிதாபிமான பிரச்னைகளுக்கான தீர்வு மற்றும் நல்லிணக்க முயற்சிகள் பற்றி கேட்டறிந்து கொண்டார். அச்சமயம் இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெற்றிகாணபதில் விரிவான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அன்று ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு தீர்வு காணல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக பான் கீ மூனுக்கும் வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். ஆனால் அன்று வழங்கிய வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையிலேயே இன்றைய ஐ.நா. செயலாளரிடம் பலதரப்பட்ட வாக்குறுதிகளையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து பன்னிரெண்டு வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால், நீதி விசாரணைகளின்றி தடுப்புக் காவலிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பதிலளிப்பதில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தோரை மீள் குடியேற்றம் செய்தல், யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மேலதிக ஆயதப்படை முகாம்களை அகற்றுதல் போன்றவற்றுக்கு இதுவரை உரிய தீர்வு முழு அளவில் காணப்படவில்லை. இவைதவிர, அரசியல் தீர்வுடன் கூடிய நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் மந்தகதியிலேயே இருந்து வருகின்றன. இவற்றின் பின்னணியிலேயே ஜனாதிபதி இன்றைய ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ இடம் மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு தீர்வு மற்றும் நல்லிணக்கம் என்பவை தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்.

இதேவேளை புலம்பெயர் தமிழர்களையும் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான நல்லிணக்க முயற்சிகளில் பங்கேற்க முன்வருமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச ரீதியில் பக்கபலமாக இருந்து வருவோரே புலம்பெயர்ந்த தமிழர்கள். வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பித்த காலத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புகளை எதிர்நோக்கியவர்களே புலம்பெயர்ந்த தமிழர்கள்.

அவர்களின் உறவுகளில் பெரும்பாலானவர்களின் மனிதாபிமானப் பிரச்னைகள் இன்று வரை தீர்க்கப்படாதிருக்கின்றது. அத்துடன், ஒரு பரந்துபட்ட அரசியல் தீர்வு வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு எட்டப்படாமலும் இருக்கின்றது. இத்தகைய பின்னணியிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புலம்பெயர் தமிழர்களுக்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த அழைப்பு விடுத்துள்ளதோடு பல்வேறு மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு தீர்வு காண தாம் தயாராக இருக்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உள்ளக அணுகுமுறையொன்றின் மூலமாக வடக்கு - கிழக்கு பிரச்னைகளுக்கு தீர்வொன்றைக் காணமுடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதன்மூலம் வடக்கு - கிழக்கு தமிழர்கள் சர்வதேச சமூகத்தை தமது பிரச்னைகளுக்கான தீர்வுக்காக நாடி நிற்பதில் பயனில்லை என்பதையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், உள்ளக அணுகுமுறை என்பது இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இருந்து வந்ததோடு அந்த அணுகுமுறை பயனற்றதாகவும் ஏமாற்றத்தை தருவதாகவும் இருந்தமையினாலேயே சர்வதேச சமூகத்தினரை வடக்கு - கிழக்கு தமிழர்கள் நாட வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் சர்வதேச சமூகத்திடம் உள்ளக அணுகுமுறை குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எது எப்படியிருந்த போதிலும் நாட்டின் அபிவிருத்திக்கும், பொருளாதார ரீதியான ஈடேற்றத்துக்கும் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை காண்பதன் மூலமே வழியமைக்க முடியும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உணர வேண்டியவராகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

செப்ரெம்பர் - 22 புதன்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 7.30 - 09.00
திதி : துவிதியை




**மேடம்**
ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் நலம் நிறையும்.திடீரென்று சுபச்செய்திகள் வந்து சேரும். அமைதியான நாள். சகோதர, சகோதரிகள் நட்புணர்வுடன் இருப்பார்கள்.

**இடபம்**
வேலைப்பளு குறையும். மனதில் நிம்மதி ஏற்படும். உறவினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். உறவினர்களால் விரோதத்திற்கு ஆளான நிலை மாறும்.

**மிதுனம்**
வீண் செலவுகள் ஏற்படும். மனதில் உற்சாகம் பெருகும்.பெரிய மனிதர்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவீர்கள்.வீட்டில் உடனிருப்பவர்களின் பாசம் வெளிப்படையாகும்.

**கடகம்**
வெளியூர் பயணங்களால் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத நன்மைகள் வீடு தேடி வரும். நட்பு வட்டம் விரியும். வரவு திருப்தி தரும் நாள். நம்பிக்கை இழக்க வைத்த செயல் மாறும்.

**சிம்மம்**
பிறர் மனம் புண்படும்படி பேச வேண்டாம். செயலில் கவனம் தேவை. மாற்றுக் கருத்துடையவர்கள் தானாக மனம் மாறுவர். பெற்றோர் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்.

**கன்னி**
முன்னேற்றமான நாள். நட்பு வட்டம் விரியும். வருமானம் போதுமானதாக இருக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம்.

**துலாம்**
அடுத்தவர்களுக்கு உதவி செய்து ஆனந்தம் காணும் நாள். பொதுநல விஷயத்தில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். ஒதுங்கிச் சென்ற ஒப்பந்தம் தானாக வந்து சேரும்.

**விருட்சிகம்**
வாழ்க்கைத் துணைக்கு இருந்து வந்த பிரச்னை அகலும். உடல் நலத்தை சீராக்கும் முயற்சிகள் பலன் தரும்.திட்டமிட்ட விஷயம் ஒன்று திசை மாறியதால் நன்மை வரும்.

**தனுசு**
திடீர் செலவுகளைச் சந்திக்க நேரிடலாம். கவனம் தேவை. தொழில், பணியில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. நட்பு பகையாகும்படி உங்கள் கோபத்தை அனுமதிக்காதீர்கள்.

**மகரம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைத்தாலும் கவனம் தேவை. நினைத்துப்பாராத நபரிடமிருந்து உதவி கிடைத்து மகிழும் நாள். பணி பற்றிய முயற்சி வெற்றி தரும். கலகலப்பான நாள்.

**கும்பம்**
உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அரசியல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு அனுகூலம் உண்டு. அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**மீனம்**
அமைதியைக் கடைபிடிக்க வேண்டிய நாள். அலைச்சல் அதிகரித்தாலும் மனதில் உற்சாகம் இருக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள்.

# 7 பேர் விடுதலையை தி.மு.க. அரசு நீர்த்துப்போகச் செய்துவிட்டதா?

## கேள்வி எழுப்புகின்றார் பன்னீர்செல்வம்

சென்னை, செப். 22,

'நீட்' தேர்வு பிரச்னை போல் 7 பேர் விடுதலையையும் தி.மு.க. அரசு நீர்த்துப்போகச் செய்துவிட்டதா என்று ஓ. பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார். தமிழக சட்டத்துறை அமைச்சர் வெளியிட்ட கருத்து ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே பன்னீர்செல்வம் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள 7 பேர் விடுதலை குறித்து செய்தியாளர்களிடையே பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதியின் பதிலை பார்க்கும்போது, 'கழுவுற மீனிலே நழுவுற மீன்' என்ற பழமொழிதான் என் நினைவுக்கு வருகிறது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கு பிறகு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு மு.க.ஸ்டாலின் முதல்



அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், 19-5-2021 அன்று ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், மாநில அரசின் பரிந்துரையை ஏற்று 7 பேரை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். முதலமைச்சர் கடிதம் எழுதி 124 நாட்கள் ஆகியுள்ள சூழ்நிலையில், எந்த வித நடவடிக்கையும் இல்லாதது பொதுமக்களிடையே மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழ்நிலையில், 'ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகள் 7 பேர் விடுதலை தொடர்பாக, முந்தைய கவர்னரால் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் புதிய ஆளுநரிடம் அழுத்தம் கொடுக்க முடியாது' என்று சட்ட அமைச்சர் ரகுபதி தெரிவித்திருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. அமைச்சரின் பேட்டியை பார்க்கும்போது, இந்த பிரச்னையையும் 'நீட்' பிரச்னை போல தி.மு.க. அரசு நீர்த்துப்போகச் செய்துவிட்டதோ என்ற எண்ணம் அனைவரிடமும் மேலோங்கி நிற்கிறது.

எனவே, முதலமைச்சர் இந்த பிரச்னையில் உடனடியாக தலையிட்டு, தனிப்பட்ட முறையிலும், தி.மு.கவின் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் மூலமும் மத்திய அரசுக்கு போதுமான அழுத்தத்தைக் கொடுத்து, தி.மு.கவின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 7 பேர் விடுதலையை உறுதி செய்ய வேண்டும்" என அவர் கூறியுள்ளார்.

# உள்ளாட்சி அமைப்புகள் அதிகாரங்களை போராடித்தான் பெறவேண்டி இருக்கிறது

## கமல்ஹாசன் கருத்து

சென்னை, செப். 22,

"உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் அதிகாரங்களைப் போராடித்தான் பெறவேண்டி இருக்கின்றது" என்று மக்கள் நீதி மய்ய தலைவர் கமல் ஹாசன் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடக்கும் 9 மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒக்டோபர் 2ஆம் திகதி கிராம சபை கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தமிழக அரசு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது. மேலும், கொரோனா நெறிமுறைகளை கடைப்பிடித்து கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ருவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: -

"கிராம சபைகளை நடத்தும் அதிகாரத்தில் மாநில அரசும், மாவட்ட நிர்வாகமும் தலையிட முடியாது என பஞ்சாயத்



துத் தலைவர் ஒருவர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்துள்ளது. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் அதிகாரங்களைப் போராடித்தான் பெற வேண்டி இருப்பதன் அடையாளம் இது" என்று பதிவிட்டுள்ளார்.

# "எப்போதும் எப்படி இளமையாகவே இருக்கிறீர்கள்?" ஸ்டாலினிடம் கேள்வி

## நேற்றைய தினம் வைரலாகிய காணொலி



சென்னை, செப். 22,

"எப்போதும் எப்படி இளமையாகவே இருக்கிறீர்கள்" என்று சென்னையில் நடைப் பயிற்சி மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலினிடம், அங்கே வந்த பெண் கேள்வி எழுப்பிய காணொலி இணையத்தில் வைரலாகி வருகிறது.

சென்னை, அடையாறு தியாசாபிகல் சொசைட்டி வளாகத்தில் நேற்று காலை நடைப் பயிற்சி மேற்கொண்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அப்போது அவருடன் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இருந்தார்.

அங்கே நடைப்பயிற்சி மேற்கொண்ட மக்கள் சிலரிடம் உரையாடினார் முதல்வர். "இரு வருடங்களுக்கு முன்னர் விமான நிலையத்தில் உங்களைச் சந்தித்தேன். நீங்கள் கட்டாயம் ஆட்சிக்கு வந்தே ஆகவேண்டும் என்று கூறினேன். நீங்கள் ஆட்சிக்கு வந்ததில் மிகவும் மகிழ்ச்சி. ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்து செய்கிறீர்கள். இது அப்படியே தொடர வேண்டும்" என்று பெண் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், "கால்பந்து விளையாட்டுக்காக வெளிநாடு சென்றுள்ள உங்கள் பேரன் வெற்றியுடன் திரும்பவேண்டும். அவர் கடற்கரையில் பயிற்சி எடுக்கும்போது பார்த்திருக்கிறோம்" என்று அப்பெண் கூறினார்.

மேலும் அவர், "கடைசியாக உங்களிடம் ஒன்று கேட்கிறேன். எப்படி எப்போதுமே இப்படி மார்க்கண்டேயனாகவே இருக்கிறீர்கள்?" என்று கேட்க, அங்கிருந்த அனைவரும் சிரித்தனர். அப்போது முதல்வர் ஸ்டாலின், "உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதே காரணம்" என்று பதிலளித்தார். மேலும் சில நிமிடங்கள் முதல்வர் ஸ்டாலின் உரையாடிய காணொலி, இணையத்தில் வைரலாகி வருகிறது.

# மொட்டு கூட்டுக்குள் மீண்டும் குழப்பம்!

## ஜனாதிபதியின் வருகைக்காக பங்காளிகள் காத்திருப்பு

**கொழும்பு, செப்.22**

**கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பேச்சு நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி அரசியல் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நிதி அமைச்சால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு பங்காளிக்கட்சிகள் இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை. எனினும், இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, எமது மக்கள் சக்தி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியன இலங்கை கம்யூனிஸ் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முக்கித்துவமிக்க சந்திப்பொன்றை நடத்தியிருந்தன.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, அத்துரலிய ரத்ன தேரர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்கள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவரை சந்தித்து இது சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் இதர கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்திடம் வழங்குவதற்கு பங்காளிக்கட்சிகள் எதிர்ப்பா என்பது தொடர்பில் அக்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. எமது நடவடிக்கை என்ன வென்பதை பொறுத்திருந்து பாருங்கள் என்று குறிப்பிட்டனர். அதுமட்டுமல்ல கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு நடந்த கதியே இதற்கு நடைபெறும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

# பால்மா விலையை அதிகரிக்க இதுவரை தீர்மானிக்கவில்லை

## லசந்த அழகியவண்ண கூறுகிறார்



கொழும்பு, செப். 22

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலையை 200 ரூபாய் வரை அதிகரிப்பது தொடர்பில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவிலேயே தீர்மானிக்கப்படும் எனவும் ராஜாங்க குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் பால்மா விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து, இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் கடந்த ஒரு மாதகாலமாக கோரி வருகின்றன.

விலை அதிகரிக்க அனுமதிக்கப்படாதமையால் அவர்கள் தற்போது இறக்குமதியை மட்டுப்படுத்தி இருக்கின்றனர். அதனால் சந்தையில் கடந்த சில வாரங்களாக பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த பின்னணியில் பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது உலக சந்தையில் பால்மா விலை அதிகரிக்கப்பட்டிருப்பது, கப்பல் கட்டணம் அதிகரித்திருப்பது, ரூபாவுடன் ஒப்பிடுகையில் டொலரின் பெறுமதி அதிகரித்திருப்பது போன்ற காரணங்களுக்கமைய ஒரு கிலோ கிராம் பால்வின் விலையை 350 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

என்றாலும் சந்தை நிலைமை மற்றும் இறக்குமதி வரி தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஒரு கிலோ பால்மாவின் விலையை 200 ரூபாய் வரை அதிகரிப்பது தொடர்பில் கொள்கையளவில் இணக்கப்பாட்டு எட்டப்பட்டுள்ளது.

இருந்தபோதும் பால்மாவுக்கான விலை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை இதுவரை அனுமதி வழங்கவில்லை. எதிர்வரும் வாரத்தில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு இதுதொடர்பாக கலந்துரையாடிய பின்னரே விலை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 'பூஸ்டர்' தடுப்பூசி வழங்க அரசாங்கம் தீர்மானம்!

கொழும்பு, செப். 22

நாட்டின் சனத்தொகையில் 67 சத வீதமானோருக்கு பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளது டன் அதற்கு தேவையான தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பூஸ்டர் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படவுள்ள நிலையில் அதற்கான முற்பணமும் செலுத்தப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை ஒரு கோடியே 37 இலட்சத்து 49 ஆயிரத்து 897 பேருக்கு கொரோனா முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கோடியே 10 இலட்சத்து 54 ஆயிரத்து 101 பேருக்கு இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் மேலும் 35 பேருக்கு கொரோனா

வவுனியா, செப். 22

வவுனியாவில் கொரோனா தொற்று 35 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக கொரோனா தொற்று 35 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை தனிமைப் படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் மரணித்த 5 பேரின் உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்யவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# டொலர் பற்றாக்குறையே பொருள்களை இறக்குமதி செய்ய முடியாமைக்கு காரணம்

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்



கொழும்பு, செப். 22

வெளிநாடுகளிலிருந்து அத்தியாவசிய பொருள்களையும் சமையல் எரிவாயுவையும் இறக்குமதி செய்ய முடியாமைக்கு டொலர் பற்றாக்குறையே காரணம் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசியல் இலாபம் கருதியே அத்தியாவசிய பொருள்களுக்கான இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை மறுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து ருவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தில் அரசியல் செய்யவேண்டிய தேவை இலங்கைக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பட்சத்தில் உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எரிவாயு விலை அதிகரிப்பு உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அஜித் நிவாட் கப்ரால் கூறினார்.

மேலும் நாட்டில் காணப்படும் அனைத்து பொருளாதார பிரச்சனைகளுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் அடுத்த 6 மாத காலத்திற்கு தீர்வுகள் முன்வைக்கப்படும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.

# அனைத்து வர்த்தக நிலையங்களையும் இப்போது திறக்க அனுமதிக்கமுடியாது!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 22

நாட்டில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் தற்போது மீண்டும் திறக்க அனுமதிக்க முடியாது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் ஊடக பேச்சாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் ஊடகங்களுக்கு உரையாற்றுகையில், பொறுமையாக இருப்பது மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிப்பது நன்மைகளைப் பெற உதவும்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் பதிவான கொரோனா வைரஸ் அலையில் நாளாந்த தொற்று எண்ணிக்கை 1,000 ஐ கடக்கவில்லை என்றும், சமீபத்திய அலை யில் இந்த எண்ணிக்கை பெரியளவில் அதிகரித்தது. இது இப்போது 1,700 ஆக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சுகாதார அமைச்சு நாட்டை மீண்டும் மீண்டும் திறக்க விரும்பவில்லை. முடிவெடுப்பதில் கடந்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்-என்றார்.

இதற்கிடையில், நாட்டில் மதுபானக் கடைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு யார் பொறுப்பு என்பது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது எனவும் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

(அ)

# வவுனியா நகரசபை உறுப்பினர் கொரோனாவினால் உயிரிழப்பு

வவுனியா, செப். 22

வவுனியா நகரசபை உறுப்பினர் தர்மதாச புஞ்சிகுமாரி கொரோனா தொற்று நோயினால் உயிரிழந்தார்.

அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக் கப்பட்டது. அதன் முடிவுகளின் அடிப்படையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவர் சுதந்திரக்கட்சி சார்பாக வவுனியா நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வெலிக்கடை கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, செப். 22

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை சுமார் 10 கைதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமது தண்டனையை குறைக்குமாறு கோரி சிறைச்சாலை கூரை மீதேறி கைதிகள் நேற்று முன் தினம் முதல் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் கைதிகளின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வை வழங்க தமது திணைக்களத்துக்கு இயலாதென அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கொரோனாவைவிடவும் இந்த அரசு கொடூரமானது!

## சஜித் அணி சொல்கிறது

கொழும்பு, செப்.22

**“கொரோனாவும், தற்போதைய அரசும் ஒன்று. எனவே, இவ்விரண்டு வைரஸ்களுமே இல்லாதொழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் விடிவு பிறக்கும்” -என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அரசை, வைரசுடன் ஒப்பிட்டு கடும் விமர்சனங்களை பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் முன்வைத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் கொரோனா வைரஸ் தாண்டவமாடுகின்றது. வெளிநாட்டில் இருந்துதான் இந்த வைரஸ் எமது நாட்டுக்குள் நுழைந்தது. அதுபோல்தான் ‘நாட்டு தலைமைத்துவம்’ என்ற வைரசும் வெளிநாட்டில் இருந்தே வந்துள்ளது. நிதி அமைச்சரும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்தான். தற்போதைய அரசையும், தலைமையையும் வைரஸ் என விளிப்பதற்கு காரணம் உள்ளது.

குறிப்பாக கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் கொமிஷன் என்ற வைரசும் வேகமாக பரவிவருகின்றது. உலக நாடுகளில் மக்களை பாதுகாக்கவே தடுப்பூசி ஏற்றப்பட்டது, ஏற்றப்பட்டு வருகின்றது. ஆனால்,எமது நாட்டில் அரசை பாதுகாக்கவே தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. தடுப்பூசியை வைத்து அரசியல் நடத்தப்படுகின்றது. நவம்பர் மாதம் பெருமெடுப்பில் நிகழ்வொன்றை நடத்தவும் ஏற்பாடுகள் இடம்பெறுவதாக அறியமுடிகின்றது.

நாட்டில் இன்று மத்திய வங்கியில் ‘ஊழல்’ என்ற வைரஸ். உரம் பாவனை விடயத்திலும் கொமிஷ் என்ற வைரஸ். சீனி இல்லை, பால்மா இல்லை. ஏன்! மலசலகூட உதிரிபாகங்கள்கூட இல்லை. இப்படி பல வைரஸ்களை இந்த அரசு உருவாக்கியுள்ளது. எனவே, இந்த வைரஸ்களை ஒழிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப் பட வேண்டும். அதற்கு மக்க ளின் ஒத்துழைப்பு அவசியம்-என்றனர்.

# மீண்டும் பாராளுமன்றம் சென்ற ஜயந்த கெட்டகொட

கொழும்பு, செப். 22

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நிதி இராஜாங்க அமைச்சராக செயல்பட்ட அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கி ஆளுநர் பதவியைப் பெறுவதற்காக அண்மையில் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஜயந்த கெட்டகொட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்றப் பிரவேசத்திற்காக தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சிமெந்துக்கு திடீர் தட்டுப்பாடு!

வவுனியா, செப். 22

வவுனியாவில் சீமெந்துக்கு திடீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. வியாபார நிலையங்களுக்கு சிமெந்தினை கொள்வனவு செய்வதற்காக செல்லும் பொதுமக்கள் அங்கு இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

# உலகின் கவனத்தை ஈர்க்கவுள்ள ஜனாதிபதியின் மூன்று உரைகள்

கொழும்பு, செப். 22

ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று அரச தலைவர்கள் மாநாட்டு அமர்வில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

அதனையடுத்து நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ள உணவு மற்றும் வலு சக்தி தொடர்பான உயர்மட்ட அமர்வுகளிலும் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது பொதுச் சபை அமர்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழுவினர் 18ஆம் திகதி நியூயோர்க் சென்றடைந்தனர்.

இலங்கை தூதுக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நம்பிக்கையுடன் செயற்படுவதற்கான சூழலை கட்டியெழுப்புதல், நிலையான இயல்பு நிலையை மீண்டும் உருவாக்குதல், மக்களின் தேவைகளுக்கு பதிலளித்தல், மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பை புத்துயிர் பெறச் செய்தல் என்ற பொருளில் இம்முறை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அரச தலைவர்கள் அமர்வு நேற்று ஆரம்பமானது.

அமர்வின் இரண்டாம் நாள் பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரை நிகழ்த்தவுள்ளார். அதேவேளை 23ஆம் திகதி நடைபெறவுள்ள உணவுத் தொகுதி மாநாடு மற்றும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள மின் சக்தி தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலிலும் ஜனாதிபதி பங்கேற்று கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்.

மாநாட்டு அமர்வின் இடைப்பட்ட காலங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள பல்வேறு நாடுகளினதும் அரச தலைவர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுகளிலும் ஈடுபடவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


# கனடா தேர்தலில் 3ஆவது முறையாகவும் வென்று எம்.பியாகிறார் தமிழ் கனேடியர் ஹரிஆனந்தசங்கரி!

மொன்றியல், செப். 22

தமிழ் கனேடியரான ஹரி ஆனந்தசங்கரி கனடா பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் வென்று கனேடிய பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

ரொறன்டோவின் - ஸ்கார்பரோ ரூஜ் பார்க் தொகுதியில் லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களை விட பெரும்பான்மையான வாக்குகளை பெற்று சிறப்பான வெற்றியைப் பதிவு செய்தார்.

2011 தேர்தலில் இதே தொகுதியில் போட்டியிட்ட லிபரல் வேட்பாளர் ஹரி ஆனந்தசங்கரி 34.8 சதவீத வாக்குளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட் டிவ் வேட்பாளர் 31.6 சதவீதம் வாக்குகளையும் என்.டி.பி. வேட்பாளர் 31 சதவீத வாக் குகளை பெற்றிருந்தனர். 2019 இரண்டாவது தேர்தலிலும் அவர் சிறப்பான வெற்றியை பதிவு செய்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் அவர் மீண்டும் மூன்றாவது தடவையாக வென்று சாதித்துள்ளார்.



ஹரி ஆனந்தசங்கரி இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுலைக் கூட்டணியின் தலைவருமான வி.ஆனந்தசங்கரியின் புதல்வராவார்.

13 வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த ஹரி ஆனந்தசங்கரி, புலம்பெயர் தமிழர்களின் வரலாற்றில் பல அரிய செயல்களைச் செய்தவர்.

கனடாவில் தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்ட வன்முறை சார்ந்த ஒரு கலாசாரத்தை அழிப்பதற்கான கனடிய தமிழ் இளைஞர்கள் சேவை நிலையத்தை ஆரம்பித்து கனடாவில் தமிழ் இளைஞர்களின் முரண்பாடுகளைத் தீர்க்கப் பாடுபட்டவர்.

அதேபோல கனடாத் தமிழ்ச் சங்கத்தின் செயல் பாடுகளிலும் ஒரு காலகட்டத்தில் ஆரோக்கியமான பங்க ளிப்பை வழங்கியவர். இதற்கும் மேலாக கனடியத் தமிழ்க்கொங்கிரஸ்என்ற அமைப்பின் வளர்ச்சிக்கான பொருளாதார உதவுநராக இருந்தவர்.

மனித உரிமை வழக்கறிஞரான ஹரி ஆனந்தசங்கரி, சிறப்பான அரசியல்வாதியாகவும் பெயர் பெற்றுள்ளார்.

லிபரல் கட்சி தலைவராக ஜஸ்ரின் ரூடோவை தேர்வு செய்வதிலும் ஹரி ஆனந்தசங்கரி தீவர பங்காற்றியவர்.

ஹரி ஆனந்தசங்கரி மூன்றாவது முறையாகவும் கனடா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானமை புலம் பெயர் தமிழ் சமூகத்தினரிடையே உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

புலம்பெயர் தமிழ் மக்கள் தாம் வாழும் தேசங்களில் அரசியல் ரீதியில் நிலைநாட்டி வரும் சாதனைகளில் ஹரி ஆனந்தசங்கரியின் சாதனையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுனியா கிராமசேவகர்கள் இருவருக்கு கொரோனா உறுதி

வவுனியா, செப். 22

வவுனியா கனகராயன்குளம் தெற்கு மற்றும் ஊஞ்சல்கட்டி பிரிவு கிராமசேவகர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கிராமசேவகர்களுக்கு காய்ச்சல் இருந்த நிலையில் துரித அன்ரிஜென் பரிசோதனையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது அவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### யாழ்ப்பாணத்தில் 376 பேர் உட்பட

# வடக்கு மாகாணத்தில் 685 பேர் கொரோனாவால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 22

**யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 376 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 685 பேர் கொரோனாத் தொற்றினால் இதுவரையில் உயிரிழந்தனரென வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் கொரோனா மரணங்கள் அதிகமாக இடம்பெறும் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ள நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 50 பேர் இதுவரையில் வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

வடக்கில் சடலங்களை தகனம் செய்வதில் நெருக்கடி நிலை காணப்பட்டுள்ளமையால், 95 சடலங்கள் வெளி மாவட்டங்களில் தகனம் செய்யப்பட்டுள்ளன. வட மத்திய மாகாணத்தில் 79 சடலங்களும் கிழக்கு மாகாணத்தில் 16 சடலங்களும் மின் தகனம் செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் கடந்த ஓகஸ்ட் மாதம் மட்டும் 228 பேர் உயிரிழந்தார். அதன் பின்னர் செம்ரெம்பர் மாத்தில் 20 நாட்களுக்குள் 260 வரையில் உயிரிழந்தார் - என்றார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 6,256 பேருக்கு கொரோனா!

### 73 பேர் உயிரிழப்பு

கிளிநொச்சி, செப். 22

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 6,256 பேர் கோவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி இருப்பதுடன் 73 மரணங்களும் பதிவாகி இருக்கின்றன என்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்படி தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் 6,256 பேர் கொவிட் தொற்றுக்கு இலக்காகி உள்ளனர். இதில் தற்போது 537 பேர் சிகிச்சை பெற்று சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் மாவட்டத்தில் இதுவரை 73 மரணங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் முதலாவது தடுப்பூசியை 61,894 பேர் பெற்றுள்ளனர். அதேபோல முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகளை 43 ஆயிரத்து 507 பேர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 107 பேர் மட்டும தடுப்பூசிகளை பெற்றுள்ளனர் -என்றார்.

# வவுனியாவில் 20 நாள்களில் 2222 பேருக்கு கொரோனா!

### 106 பேர் மரணம்

வவுனியா, செப். 22

வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி வரை 2,222 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 106 பேர் மரணமடைந்தனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று வீதம் நாளாந்தம் அதிகரித்து செல்கின்றது. குறிப்பாக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை 2,222 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 106 பேர் கொரோனா தொற்றினால் மரணமடைந்தனர்.

நாட்டில் ஏற்படும் மரண வீதத்தில் வவுனியாவில் மரணிப்போரின் தொகை பாரியளவில் காணப்படுகின்றது.

வவுனியாவில் மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் மரண தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது.

ஆகவே, வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என சுகாதார பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 3328 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 50 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 2020 ஏ.எல். பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலை அனுமதிக்கான சதவீதம் வெளியீடு

கொழும்பு, செப். 22

பழைய மற்றும் புதிய பாடத் திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதிக்கான மாவட்ட வாரியான சதவீதம் வெளியிடப்பட்டது.

இசட் வெட்டுப்புள்ளி அடுத்த மாதம் அறிவிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

# தாமதமின்றி தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுங்கள்

### ஹேமந்த ஹேரத் கோரிக்கை



கொழும்பு, செப். 22

எதிர்காலத்தில் தடுப்பூசி செலுத்தும் திட்டம் மட்டுப்படுத்தப்படலாம் என்பதால், தாமதமின்றி தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களை கேட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்படும் நடமாடும் தடுப்பூசி திட்டம் எதிர்காலத்தில் கிடைக்காமல் போகலாம் என பொது சுகாதாரச் சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

அதற்கு பதிலாக, தடுப்பூசி நடவடிக்கை குறைந்த எண்ணிக்கையிலான நிலையங்களில் நடத்தப்படும் என்றும் மேலும் இந்த செயன்முறை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை உறுதியாக கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஒரு வருடத்துக்குள் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மூன்றாவது (பூஸ்டர்) தடுப்பூசியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஏற்கனவே விவாதம் இடம்பெற்று வருவதாக ஹேமந்த ஹேரத் கூறினார்.

குறித்த மூன்றாவது தடுப்பூசியை வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்தால் முதல் மற்றும் இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்கான நேரம் இருக்காது என்பதனால் இவற்றைக் கருத்திற்கொண்டு விரைவில் தடுப்பூசி செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

(அ)

# ரிஷாத்தின் மறியல் தொடர்ந்தும் நீடிப்பு

கொழும்பு, செப். 22

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் எதிர்வரும் 05 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விளக்கமறியல் உத்தரவை நீடித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி, கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரிக்கு நிதியுதவி வழங்கியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் ரிஷாத் பதியுதீன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஆயிரத்து 47 பேர் குணமடைவு

கொழும்பு, செப். 22

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 47 பேர் குணமடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 34 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 5 இலட்சத்து 6 ஆயிரத்து 9 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 218 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மூன்றாவது தடுப்பூசியாக பைசர் வழங்கத் திட்டம்

கொழும்பு, செப். 22

நாட்டு மக்களுக்கான மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்காக தடுப்பூசிகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்காக தேவைப்படும் 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை முற்பதிவு செய்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில், மூன்றாவது தடுப்பூசியானது எதிர்வரும் ஒக்ரோபர் நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என அவர் கூறினார்.

(அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் அத்துருகிரியவில் ஒருவர் கைது

கொழும்பு, செப். 22

அத்துருகிரிய-ஹோாகந்தர பகுதியில் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சிகரெட் தொகையுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும்போது சந்தேக நபரிடமிருந்து 9,400 வெளிநாட்டு சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் ஹோாகந்தர பகுதியில் வசித்து வரும் 54 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# முல்லைத்தீவில் தடத்தில் சிக்கிய சிறுத்தை மீட்பு

முல்லைத்தீவு,செப்.22

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் தடத்தில் சிக்கிய பெண் சிறுத்தையை வன ஜீவ ராசிகள் திணைக்களம் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

5 அடி நீளம் கொண்ட குறித்த பெண் சிறுத்தை புலி வேட்டைக்காக கட்டப்பட்டிருந்த தடத்தில் சிக்கியுள்ளது.

இந்த நிலையில் நேற்றுப் பகல் இந்த சிறுத்தையை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுத்தைக்கு சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் வில்பத்து காட்டில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது.

# பெண்களின் வாழ்வாதாரமும் கூட்டு முயற்சிகளும்




யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாகியும் பொருத்தமான மீள் கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படாத நிலையில் பெண்களின் வாழ்வாதாரம் என்பது மிகவும் முக்கியமானது. காரணம் பல குடும்பங்கள் பெண்களால் மட்டுமே கொண்டுநடத்தப்படுகிறது. மேலும் வடமாகாணத்தில் வாழ்வாதாரம் என்பது முழு குடும்பத்தின் உழைப்பையும் சார்ந்ததாகவே இருக்கிறது.

இங்கு பெண்களின் வருமானமீட்டலுக்கான முதலீடுகள், வளங்கள் மற்றும் உதவிகள் என்பன மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும் பொருத்தமற்றவையுமாகவே இருக்கின்றன. பெண்கள் வருமான மீட்டல் மற்றும் குடும்ப பராமரிப்பு என்ற இரண்டு சுமைகளையும் பொறுப்பெடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால், அரச மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் திட்டங்களில் இது கவனத்தில் கொள்ளப்படுகின்றதா என்பது கேள்வியே.



தற்போதைய நாட்டின் நெருக்கடி மத்தியில் உணவுக்குக்கூட பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இங்கு பெண்கள் பிரதானமாக பண வருமானத்தை உழைக்கும் குடும்பங்களிலும் சரி ஆணும் பெண்ணும் வருமானமீட்டும் குடும்பங்களிலும்சரி பெண்களின் வாழ்வாதாரம் முக்கியமானது. இக்கட்டுரையை எழுதும் இருவரும் கடந்த சில வருடங்களாக மேற்கொண்டுவரும் பெண்களுடைய சமூக, பொருளாதார பிரச்னைகள்சார்ந்த ஆய்வுகளில் இருந்து வந்த சில கருத்துக்களை இங்கு பதிவு செய்கிறோம்.

**கிராமமும் நகரமும்**

வடமாகாணத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கிடையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. குறிப்பாக கூலிவேலை செய்யும் மக்களிடம்கூட கிராமப்புறங்களில் குறைந்தது அரை ஏக்கர் காணியாவது இருக்கிறது. இதில் அவர்களின் உணவுத்தேவைக்கான சில பொருட்களான தேங்காய், மரக்கறிகள், விறகு போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதனால் அவர்களின் நாளாந்த செலவு குறைகிறது. ஆனால், யாழ்ப்பாண நகர்ப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு காணிகள் குறைவாக இருப்பதும் பலபேருக்கு காணிகள் இல்லாமலிருப்பதாலும் அவர்கள் சகல பொருட்களையும் பணத்திற்கு வாங்கவேண்டியிருக்கிறது.

பொதுவாக ஒரு பெண்ணிடம் நீர்ப்பாசனம் மற்றும் பிற வளங்கள் உள்ள இரண்டு ஏக்கர் காணி இருக்குமாயின் அவர்களின் சமூக பொருளாதார நிலை ஓரளவிற்கு ஸ்திரமாக இருக்கும். நகர்ப்புறங்களை சார்ந்திருப்பவர்கள் நாள்கூலியில் தங்கியிருப்பதனால் தற்போது ஏற்பட்டுள்ள கோவிட் நெருக்கடியால் அவர்கள் உணவைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், கிராமப்புறங்களில் சில உணவுகளையாவது உற்பத்தி செய்து தப்பிப்பிழைக்கக்கூடியதாக உள்ளது.

இங்கு நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் உற்பத்திச்செலவுகளை குறைப்பதற்காக பெரும்பாலும் குடும்பமாக இணைந்தே வாழ்வாதார முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள். அதாவது விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் உணவு தயாரித்து விற்பனை செய்தல் போன்ற வேலைகளுக்கு பெண்களின் ஆதரவும் உதவியும் ஆண் தொழிலாளிகளுக்கு முக்கியமானது. பிள்ளைகளும்கூட குடும்ப வாழ்வாதார முயற்சிகளுக்கு உதவுகிற நிலமை இருக்கிறது. ஆனால், பெண்கள் மட்டும் வருமானமீட்டும் குடும்பங்களில் அவர்கள் மட்டுமே குடும்ப பராமரிப்பையும் வருமான மீட்டலையும் தனிநபராக சுமக்க வேண்டியுள்ளது. இதனால் பிள்ளைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திலோ தங்களின் சுகாதாரத்தை கவனிப்பதற்கோ நேரம் மிகவும் குறைவாகவே உள்ளது.

**தற்போதைய அணுகுமுறை**

யுத்தத்திற்கு பின்பு அரசாங்கத்தினதும் தொண்டு நிறுவனங்களினதும் வாழ்வாதார திட்டங்கள் நுண்நிதியை கொடுத்து சுயதொழிலை ஊக்குவித்து அவர்கள் முயற்சியாளர்களாக வரலாம் எனும் மாயையை உருவாக்கி மக்களை கடனாளிகளாக்கியதுதான் நடைபெற்றது. இங்கு சிலருக்கு சர்வஜன அடிப்படை வருமானமே பொருத்தமானதாக இருக்கும். எடுத்துக்காட்டாக மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் கணவன் இல்லாமல் சிறுபிள்ளைகளுடனும் வயோதிப பெற்றோருடனும் வாழும் பெண்களை பொறுத்தவரை அவர்களின் முழு உழைப்பும் பராமரிப்பு வேலைகளாகத்தான் இருக்கிறது. இவர்களுக்கு அரசாங்கம் சமூக நல அடிப்படையிலான மானிய திட்டங்களை உருவாக்கவேண்டும்.



> **தற்போதைய நாட்டின் நெருக்கடி மத்தியில் உணவுக்குக் கூட பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இங்கு பெண்கள் பிரதானமாக பண வருமானத்தை உழைக்கும் குடும்பங்களிலும் சரி ஆணும் பெண்ணும் வருமானமீட்டும் குடும்பங்களிலும்சரி பெண்களின் வாழ்வாதாரம் முக்கியமானது.**

அடுத்து பொதுவான வளங்கள் இல்லாமல் இருப்பதாலும் பெரும்பாலான வாழ்வாதார திட்டங்கள் தோல்வியடைகிறது. குறிப்பாக நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களில் உள்ள மக்களிடம் காணிகள் இருந்தாலும் அந்த காணிகளில் இருந்து வருமானங்கள் பெறமுடியாது. முக்கியமாக பெண்கள் அணுகக்கூடிய வளங்கள் அவர்களுடைய சமூக குடும்பநிலை மற்றும் அவர்கள் வருமானத்திற்காக உழைக்கக்கூடிய நேரம் போன்ற ஒரு முழுமையான பார்வையுடன்தான் வாழ்வாதார திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

**கூட்டுறவு சாத்தியபாடுகள்**

நவதாராளவாத கொள்ளைகள் தனிநபர் பொறுப்பெடுத்து தனிமுதலீட்டுடன் முயற்சிகளை செய்யவேண்டும் எனும் பார்வையையும் திட்டங்களையும் முன்வைக்கின்றனர். இவ்வாறான திட்டங்களின் தோல்வி ஒருபுறமிருக்க, பெண்கள் தமது நாளாந்த வேலைகளிலும் சிறு வாழ்வாதார முயற்சிகளிலும் கூட்டாக இணைந்து வேலை செய்யும் ஆற்றலை கொண்டுள்ளார்கள். இது அவர்களின் சமூக உறவுகளுக்கூடாக கட்டியெழுப்பப்பட்ட முறைசார்பற்ற மற்றும் முறைசார்ந்த கூட்டுமுயற்சிகளாக அமைகிறது.

நாளாந்த வாழ்க்கையில் அயல் பெண்களுடன் இணைந்து விறகு சேகரிக்க செல்வதையோ அல்லது ஒரு அயலவரின் வீட்டின் சேர்ந்து சமைப்பதையோ முறைசார்பற்ற கூட்டு முயற்சிகள் என குறிப்பிடலாம். மேலும் நிறுவனமயப்படுத்தப்படாத சுய உதவிக் குழுக்கள் பெண்களின் சிறு நிதி தேவைகளுக்கு தீர்வாக இருப்பதுடன் வேறு உளவியல் ஆதரவுக்கான தளங்களாகவும் அமைகின்றன.

அடுத்து கிராமங்களில் இருக்கும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு முறைசார்ந்த கூட்டுமுயற்சியாக அமைகிறது. இங்கு பெண்கள் ஒன்றாக இணைந்து தமது சிறிய சேமிப்புகளுக்கூடாக அந்த கிராமத்தில் உள்ள பெண்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறார்கள். இந்த கட்டமைப்பு கடந்த வருடங்களில் நுண்நிதி பிரச்னைக்கு மாற்றுத்தீர்வாக அமைந்துள்ளது.

பெண்கள் கூட்டாக சேர்ந்து தொழில் முயற்சிகளை செய்யும் போது அவர்களுக்கு பல சவால்களும் எழுகிறது. எடுத்துக்காட்டாக பன்னவேலைக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை அனுபவிக்கிறார்கள். உணவு தயாரித்து கடைகளுக்கு விநியோகிப்பவர்களுக்கு ஒன்றாக கூடி உற்பத்தி செய்வதற்கு சுகாதார முறைகளுக்கமைவான பொதுவான சமையல் அறைவசதிகள் இல்லை. அதே போல் கைக்குத்தல் அரிசி தயாரிப்பவர்களுக்கு அரிசியை உற்பத்தி செய்வதற்கான சிறிய இயந்திரங்களுடன் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளும் தேவைப்படுகிறது. மேலும் சிறு மரக்கறி உற்பத்தியாளர்கள் மற்றும் கருவாடு பதனிடல் வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கு வியாபாரத்தில் பேரம்பேசி சந்தைப்படுத்தலில் சிரமம் உண்டு.

இவ்வாறான பெண்களுக்கான வாழ்வாதார சவால்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கங்கள் கைகொடுக்க ஆரம்பித்துள்ளன. குறிப்பாக பெண்களுக்கான கடன் திட்டங்கள், உற்பத்தி ஆலைகள், சேகரிப்பு நிலையங்கள் மற்றும் சந்தைப் படுத்தல் உதவிகளை செய்யத் தொடங்கியுள்ளன. அடுத்து காலநிலைமாற்றம் மற்றும் சந்தையில் ஏற்படும் பெரும் விலைத்தளம்பல்கள் போன்ற இடர்களுக்கு பெண் உற்பத்தியாளர்கள் முகம் கொடுக்க முடியாத நிலையில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் தீர்வுகள் காணவேண்டும்.

உதாரணமாக வளர்ச்சி மற்றும் இலாபம் அதிகமான காலங்களில் சேமிப்பை ஏற்படுத்தி இடர்வரும்போது இழப்புக்களை சீர் செய்து பெண்களின் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டிய திட்டங்களை உருவாக்க வேண்டும். சர்வதேச ரீதியாக கூட்டுறவின் வரலாற்றில் இவ்வாறான பல உதாரணங்கள் உண்டு. வட இலங்கையின் கூட்டுறவு இயக்கமும் இந்த பெரும் மருத்துவ அனர்த்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்வரவேண்டும்.

கட்டுரையாளர்கள் :
**அகிலன் கதிர்காமர்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**சுகன்யா காண்டீபன்,**
உதவி ஆய்வாளர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

# தலிபானின் தேன் நிலவு முடிந்ததா? அதன் முன்னுள்ள புதிய சவால்கள்!

■ மஜித் நுஸ்ரத்



ஆப்கானிஸ்தானில் தீவிரமாக மேற்கொண்ட வன்முறை செயல்பாடுகளின் விளைவாக, கடந்த ஓகஸ்ட் 15ஆம் தேதி அந்த நாட்டை தலிபான் கைப்பற்றியது. அந்த நாட்டில் ஆட்சி அதிகாரம், அதிகார பகிர்வுக்காக நடக்கும் உள்மோதல் மற்றும் தீவிரம் அடையும் பொருளாதார நெருக்கடியைப் பாரக்கும்போது, தலிபானின் தேன் நிலவுக் காலம் முடிந்து விட்டதாகவே தோன்றுகிறது.

தற்போது கந்தஹாரில் உள்ள தலிபான் தலைமை எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக தலிபானின் ஓர் அங்கமான ஹக்கானி குழு உள்ளது. வலுவுடன் விளங்கும் அந்த குழுவை வெளிநாட்டு போராளிகளும் ஆதரிக்கிறார்கள். காபூல் உட்பட கிழக்கு ஆப்கானிஸ்தானின் பாதி பகுதியை ஹக்கானி குழுவும் அதன் ஆதரவு போராளிகளுமே கிட்டத்தட்ட கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

தலிபான் தலைவர் முல்லா ஹெப்துல்லா அகுந்த்ஸாதாவை வெகு நாட்களாகக் காணவில்லை. இது குழுவின் பிரச்னைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பெரும்பாலான அமைச்சர்கள் பழையவர்கள். மேலும் பஷ்தூன் அல்லாத சமூகத்தினருக்கு பெரிய பொறுப்பு ஏதும் தரப்படவில்லை. ஆப்கானிஸ்தானில் ஆளுகையை கைப்பற்றியதன் மூலம் தலிபானுக்கு நிறைய ஆதாயம் கிடைத்துள்ளது. அது பிரிக்கப்பட்ட விதத்தில்தான் மோதல் தொடர்கிறது. ஆனால், மிக ஆழமாக பார்த்தால் அந்த மோதலுக்குள் பாரம்பரிய இனவெறிக்கும் பழங்குடிகளுக்கும் இடையிலான மோதல் மறைந்திருப்பதை பார்க்கலாம். கிழக்குப் பகுதியில் வாழும் பஷ்தூன்கள் மிகவும் வலிமை பெற்றுள்ளனர்.

இது தவிர, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புடனும் ஹக்கானி குழு நெருக்கமான தொடர்புகளை வைத்துள்ளது. இதே போல, சித்தாந்த ரீதியாக அல்ஹைடா, இஸ்லாமிய அரசு என தங்களை அழைத்துக் கொள்ளும் குழுவின் கோராசன் கிளையுடனும் ஹக்கானி குழு நெருக்கமான உறவைப் பாராட்டி வருகிறது.

முன்னாள் அதிபர் அஷ்ரஃப் கனி மற்றும் அவரைத் தவிர அதிபர்களாக இருந்த மூன்று இடதுசாரி தலைவர்களும் பஷ்தூனின் கில்சாய் பிரிவைச் சேர்ந்தவர்கள். சில ஆப்கானியர்கள் ஹக்கானி குழுவசம் ஆப்கானிஸ்தான் செல்ல அஷ்ரஃப் கனியே அனுமதித்து இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கிறார்கள்.

பெரும்பாலான மூத்த தலிபான் தலைமைப் பதவிகளை தெற்கில் உள்ள கந்தஹார் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பஷ்தூன்களே வகிக்கிறார்கள். தலிபானின் எமிருக்கு துணையாக சிராஜுதின் ஹக்கானி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2015இல் முல்லா ஒமரின் மரண அறிவிப்பு வெளிவந்த பிறகு, அடுத்த தலைமை குறித்து தென் பகுதியில் இருந்த தலிபான்கள் மோதிக் கொண்டனர். ஆனால் ஒமருக்குப் பிறகு தலைவரான முல்லா அக்தர் மன்சூர், சிராஜுதீன் ஹக்கானியை தனது மூன்று துணைத் தளபதிகளில் ஒருவராக வைத்துக் கொண்டார். இந்த சிராஜுதின் ஹக்கானி கிழக்கு ஆப்கானிஸ்தானின் கிரேட்டர் பக்தியா பகுதியைச் சேர்ந்தவர்.

மறுபுறம், தலிபான் அதி உயர் தலைவரான முல்லா ஹெப்துல்லா அகுந்த்ஸாதா, பிரதமர் முல்லா மொஹம்மத் ஹசன் அகுந்த் மற்றும் துணைப் பிரதமர் முல்லா அப்துல் கனி பராதர் மற்றும் முன்னாள் அதிபர் ஹமீத் கர்சாய் துர்ரானி ஆகியோர் பஷ்தூன்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

தலிபான் நிறுவுநர் முல்லா ஒமர் கில்சாய் பஷ்தூன் வழி வந்தவர் என்றாலும், அவரை தென் பகுதி பஷ்தூன்களுக்கான இணைப்பாகவே தாலிபன்கள் பார்த்தனர். முல்லா ஒமர், கந்தஹாரில் பிறந்த பஷ்தூன்களுடன் கலந்து வாழ்ந்தவர். அவரது மகன் முல்லா யாகூப் தாலிபன் அரசாங்கத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சராகியிருக்கிறார். அவர் தலிபான் தென் பகுதி தலைவர்களுடன் நெருக்கமாக இருப்பவராக அறியப்படுகிறார்.

புதிய தலிபான் அரசாங்கத்தில் மூத்த தலைவர்கள் இருக்கலாம். ஆனால், தெற்கிலிருக்கும் இரண்டு முக்கிய தலிபான் தளபதிகளான முல்லா கய்யூம் ஜாகிர், முல்லா இப்ராஹிம் சாதர் ஆகியோர் அரசாங்கத்தில் சேர்க்கப்படவில்லை.

**பலம் காட்டும் ஹக்கானி குழு**

ஆப்கானிஸ்தானை தலிபான் கைப்பற்றிய சில நாட்களுக்குப் பிறகு முல்லா பராதருக்கும் ஹக்கானி குழுவுக்கும் இடையே ஆட்சி அதிகாரத்துக்கு தலைமை தாங்குவது யார் என்பதில் கடும் மோதல் இருந்ததாக சமூக ஊடகங்களில் தகவல் பரவியது.

அந்த தகவல்களின்படி, முல்லா பராதர் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அரசாங்கம் தேவை என்று விரும்பியதாகவும் அவர் பஞ்ஷிர் பகுதியில் தலிபான் தாக்குதல் நடத்தியதை எதிர்த்தார் என்றும் கூறப்படுகிறது. பஞ்ஷிர் பள்ளத்தாக்குப் பகுதி கடந்த சில தசாப்தங்களாக அமைதியாக இருந்தது. ஆனால், அங்கு தாலிபன் ஆக்கிரமித்தவுடன் மிகப்பெரிய தாக்குதல் நடந்துள்ளது.

கத்தஹாரின் டோஹாவில் தலிபான் தரப்பில் அமெரிக்காவுடனும் ஆப்கானிஸ்தான் அரசுடனும் பேச்சுவ நடத்திய குழுவை வழிநடத்தியவர் முக்கியமானவர் பராதர். ஆனால், இப்போது தாலிபன் அமைச்சரவை நியமிக்கப்பட்ட பிறகு பராதரின் தகுதி குறைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.

மேலும் சில தகவல்கள், பராதர் காபூலை விட்டுச் சென்று விட்டதாகவும் அவர் எங்கு இருக்கிறார் என்பதே யாருக்கும் தெரியாது என்றும் கூறப்படுகிறது. கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதி சில நிமிடங்கள் ஓடக்கூடிய காணொளியில் தோன்றிய பரதர், ஒரு காகிதத்தில் எழுதி வைத்த அறிக்கையை வாசித்தார். கருத்து வேறுபாடுகள் இருப்பதாக வெளியான தகவலை மறுத்த அவர், தமது இருப்பிடம் பற்றி எதையும் குறிப்பிடவில்லை.

செப்ரெம்பர் 3ஆம் தேதி மாலை காபூலில் நடந்த துப்பாக்கிச் சூடு உண்மையில் ஹக்கானி குழுவின் பலத்தை காட்டுவதாக சில தகவல்கள் கூறுகின்றன. தென் பகுதியில் உள்ள தலிபானுக்கு தங்களுடைய பலத்தை அவர்கள் அந்த துப்பாக்கி சூடு மூலம் காட்டியதாகவும் தெரிகிறது. குண்டுமழை போல அவர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் டசின் கணக்கானோர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**அதி உயர் தலைவர் எங்கே?**

தலிபான்களின் அதி உயர் தலைவர் முல்லா அகுந்த்ஸாதா நீண்டகாலமாகவே வெளியே காணப்படவில்லை, மேலும் அவரைப் பற்றிய கேள்விகளை சாதாரண மக்கள் மட்டுமின்றி சில தலிபான் தளபதிகளும் பலவிதமாக ஊகித்து வருகிறார்கள். சில தகவல்கள், முகுந்த்ஸாதா கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்திருக்கலாம் என்கின்றன. மற்ற தகவல்களோ சில ஆண்டுகளுக்கு முன்பே அவர் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டார் என்றும் அங்கு அவர் வெடிகுண்டு தாக்குதலில் கொல்லப்பட்டாரென கூறுகின்றன.தலிபானுக்கு உள்ளாகவே பல முரண்பாடுகள் தோன்றும் வேளையில் ஆப்கானிஸ்தானைச் சுற்றி நிச்சயமற்ற நிலை உள்ளது. மக்களின் பார்வையில் படாமலேயே அகுந்த்ஸாதா உயிருடன் வாழ்வதும் எளிதான விஷயமல்ல.

கடந்த மாதம் ஆப்கானிஸ்தான் தொலைக்காட்சியான டோலோ நியூஸ், முல்லா ஹெப்துல்லா அகுந்த்ஸாதா நீண்ட காலமாக மக்கள் மத்தியில் தோன்றாமல் இருப்பது குறித்து கந்தஹாரில் உள்ள மக்களும் தலிபான் தலைவர்களும் அச்சம் கொண்டுள்ளதாக செய்தி வெளியிட்டது.

எனினும், அறிக்கையொன்றில் கந்தஹாரை விட்டு அகுந்த்ஸாதா விரைவில் வெளியே வருவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதும், டோலா நியூஸ், அகுந்த்ஸாதா உயிருடன் இருக்க மாட்டார் என்ற அச்சத்தை செய்தியாகவே வெளியிட்டது.

முல்லா ஒமரின் மரணத்திற்குப் பிறகு, முல்லா ஹெப்துலாவும் இறந்து விட்டால் தலிபானுக்கு புதிய தலைமை யார் என்பது தொடர்பாக நடக்கும் மோதல்கள் வரும் நாட்களில் மேலும் வலுப்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தலிபானின் தேனிலவு முடிந்தது**

மேற்கத்திய நாடுகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய பிறகு ஆப்கானிஸ்தானில் பொருளாதார நெருக்கடி கடுமையாகி வருகிறது, வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்ட பிறகு தலிபானுக்குள் நிலவும் வேறுபாடுகள் அதிகமாகியுள்ளன. இப்போது தாலிபன் ஆளுகைக்கு, சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கான சவாலுடன் சேர்த்து, நாட்டு மக்களாலும் தாங்கள் ஏற்றுக் கொள்ளப்பட ஆக்கபூர்வ நடவடிக்கையில் கவனம் செலுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசாங்கத்தை செப்டம்பர் 7ஆம் திகதி தலிபான் அறிவித்தது, ஆனால் இந்த ஏற்பாடு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை தலிபான் தெளிவுபடுத்தவில்லை. அதி உயர் தலைவரின் பணி, தலைமை கவுன்சிலின் அதிகாரம், உலமா பரிஷத்தின் பங்கு என்ன என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.



இத்தகைய சூழலில், ஆப்கானிஸ்தான் விவகாரங்களை கண்காணித்து வரும் மிக்கேல் செம்பல் என்ற ஆய்வாளர், “தலிபானை சுற்றி பல்வேறு பிரச்னைகள் உள்ளன. அதில் அதிகாரத்தை யார் கைப்பற்றுவது என்பதே பிரதானமாக பிரச்னை” என்று தெரிவித்தார்.

இதை எல்லாம் பார்க்கும்போது, தலிபானின் தேன் நிலவு காலம் முடிந்து விட்டது. இனி அந்த அமைப்பு தன்முன் உள்ள மிகப்பெரிய சவால்களை சமாளிக்கத் தயாராக வேண்டும் என்று மிக்கேல் செம்பில் கூறினார்.

■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II

நேரம் : 1 மணித்தியாலம்

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆசிரியர் மாணவர்களுக்கு (அறிவுரை / அரிவுரை) கூறினார்.

(ii) கழிவு நீர் தேங்கி நின்றதால் (துர்னாற்றம் / துர்நாற்றம்) வீசியது.

(iii) களைகள் பயிர்களுக்கு (ஊரு / ஊறு) விளைவிக்கும்.

8. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

சூரியன் உதயமாகிறது.

..............................................................................................

9. பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.

(i) பயிர் : ................................ (ii) வேம்பு : ................................

10. 'நேர்பட ஒழுகு' என்னும் ஆத்திசூடியின் பொருளை எழுதுக.


..............................................................................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Lightening : ................................

(ii) History : ................................

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

................................

(ii) 

................................

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / That / car / my : ................................

(ii) am / to / I / school / going : ................................

14. 'விதுஹல்பதி' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..............................................................................................


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

சோறு சாப்பிடுங்கள் : ................................

16. கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

| | |
|---|---|
| 7 | 0 |
| 5 | 3 |

: ................................

17. 



A, B, C, D ஆகிய நான்கு கோல்கள் உள்ள எண்சட்டம் அருகே தரப்பட்டுள்ளது.

எந்தக் கோலில் உள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் 20 ஆகும்? : ................................

18. கோலத்தின் வெற்றிடங்களில் வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

19, 22, .........., 28, ..........


19. தரப்பட்டுள்ள எண்களை **ஏறுவரிசையில்** எழுதுக.

2470, 4756, 4125, 2765 : ................................

20. விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகைத் தோடம்பழங்களில் $\frac{3}{4}$ எஞ்சியிருந்தது. எஞ்சியிருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை 57 எனின், விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட தோடம்பழங்கள் எத்தனை?

: ................................

21. பின்வரும் உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. ஒரு தென்னந் தோட்டத்தில் இருந்து மூன்று தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் அருகே தரப்பட்டுள்ளன.

| தடவை | தேங்காய்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதலாம் | 2098 |
| இரண்டாம் | 3317 |
| மூன்றாம் | 2209 |

(i) முதலாம், இரண்டாம் தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................

(ii) மூன்றாம் தடவையைவிட இரண்டாம் தடவை எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன?

: ..........................

# ஜனாதிபதி - குவைத் பிரதமர் நியூயோர்க்கில் முக்கிய பேச்சு

## இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு

கொழும்பு, செப். 22

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குவைத் நாட்டின் பிரதமர் ஷெய்க் சபா அல் - ஹமாட் அல் - சபாவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றது.**



இரு நாடுகளுக்கும் இடையிலான ஐம்பது வருடகால நெருங்கிய தொடர்புகள், நட்புறவுடன் கூடிய இராஜதந்திர உறவுகள் பற்றி நினைவூட்டிக் கொண்ட இரு தலைவர்களும், இந்தத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இலங்கையர்கள் பலர் குவைத்தில் பணியாற்றுகின்றனர் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பயிற்சி பெற்ற தொழிற்படையினருக்கு மேலும் பல வாய்ப்புகளைத் திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பாடு மற்றும் நாட்டுக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப் பரவல் நீங்கி உலகம் திறக்கப்படும்போது, இரு தரப்புகளுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ள உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.

துறைமுக நகரம், சூரிய மற்றும் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற துறைகளில் குவைத் அரசால் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் குவைத் பிரதமருக்கு ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

உணவுப் பாதுகாப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பிலும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (இ)

# கணவனை பிரிந்து வாழ்ந்து வந்த இளம் குடும்ப பெண் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, செப். 22

முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி பிரதேசத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட கொல்லவிளாங்குளம் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கணவனைப் பிரிந்த நிலையில் இரு பிள்ளைகளுடன் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 32 வயதான பிரதீபன் புஸ்பராணி எனும் இளம் குடும்ப பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில், பிரேத பரிசோதனை மற்றும் பி.சி.ஆர். முடிவுகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என மல்லாவி பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (இ)

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டவர் ஐந்து நாட்களின் பின்னர் சடலமாக மீட்பு

மீரிகம, செப். 22

மதுருப்பிட்டி மாஓயா பாலத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போன நபர், ஐந்து நாட்களின் பின்னர் அவரின் சடலம் கரையொதுங்கி உள்ளது என்று என மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

லோலுவாகொட பிரதேசத்தைச் சேர்ந்த விசு ஏ.அமரசிங்க (வயது 60) என்பவரே இவ்வாறு மரணமடைந்தார்.

அவர் கடந்த 16ஆம் திகதி மோட்டார் சைக்கிளில், மீரிகம விலிருந்து அலவ்வதல்வத்த பிரதேசத்துக்குச் செல்லும் போது பாலத்தைக் கடக்க முற்பட்டுள்ளார்.

பாலத்துக்கு மேல் ஓர் அடிக்கு வெள்ளம் வழிந்தோடிய நிலையில் வெள்ளத்தில் அவர் அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் கடந்த 18ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளது. அவரரைத் தேடும் பணியில் பொலிஸாரும் இணைந்து ஈடுபட்டு வந்த நிலையிலேயே, சடலமானது மிகவும் அழுகிய நிலையில் கிரிஉல்ல பாலத்துக்கு அருகிலிருந்து புதரிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 509 பேர் கைது

கொழும்பு செப். 22

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 509 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 25 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 76 ஆயிரத்து 145ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 190 வாகனங்களில் வந்த 357 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ)

# வெள்ளை சந்தனத்துடன் ஒருவர் வசமாக சிக்கினார்

பதுளை, செப். 22

பதுளை மாவட்டம், போகஹகும்புர பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 15 கிலோகிராம் 50 கிராம் வெள்ளைச்சந்தனத்துடன் ஒருவரை அப்புத்தளை விசேட அதிரடிப் படையினர் இணைந்து கைது செய்துள்ளனர்.

போகஹகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் வெள்ளைச்சந்தனத்துடன் ஓட்டோ ஒன்றில் பயணித்துள்ள நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# கிளிநொச்சியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, செப். 22

கிளிநொச்சி மாவட்டத்தில், பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர், இயக்கச்சியில், ஏ - 9 வீதி அருகே உள்ள, பராமரிப்பு இல்லாத காணியிலேயே, தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவர், கரந்தாய், பளையைச் சேர்ந்து, இரண்டு பிள்ளைகளின் தந்தையான காசிநாதர் சுஜிதரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டவரே, மாலை 4 மணியளவில், உறவினர்கள் தேடிச் சென்ற வேளையில், சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ)

# மஸ்தான் எம்.பியின் இணைப்பாளர் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பு

வவுனியா, செப். 22

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் இணைப்பாளர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.



வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த சலாஹீதீன் ஹாஜி (சாபு) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இவர், பட்டக்காடு மஸ்ஜிதுல் இலாஹியா ஜீம்ஆ பள்ளிவாசல் தலைவரும், பட்டாணிச்சூர் மன்பஉல் உலூம் அரபுக் கல்லூரியின் உபத லைவரும், வவுனியா பள்ளி வாசல் குழுவின் பொருளா ளரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் இணைப் பாளரும் ஆவார்.

குறித்த நபரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஓட்டமாவடிக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)

# கிளிநொச்சியில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் பரிதாப மரணம்

கிளிநொச்சி, செப். 22

கிளிநொச்சி - அக்கராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் குளம் வைத்தியசாலை வீதியில், மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

27 வயதான பேரம்பலநாதன் கேசவன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

சிறிய பெட்டிக்கடை ஒன்று அமைப்பதற்காக வெல் டிங் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தவேளை மின்சாரம் தாக்கிய நிலையில் அக்கராயன் குளம் பிரதேச வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்தார்.



சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கராயன்குளம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## கனடா பாராளுமன்ற தேர்தல்:

# மீண்டும் சிறுபான்மை அரசு அமைக்கிறது லிபரல் கட்சி!

### 3ஆவது தடவையாக பிரதமராகிறார் ட்ரூடோ

ஒட்டாவா, செப். 22

கனடா பாராளுமன்றத் தேர்தலில் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி பெரும்பான்மையைப் பெறத் தவறியுள்ளது. எனினும், “ஆட்சி அமைப்பதற்குத் தேவையான தெளிவான மக்கள் ஆணையை வென்றுள்ளோம்”, ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி தனது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளது. 2015ஆம் ஆண்டு முதல் ட்ரூடோ அதிகாரத்தில் உள்ளார். 2019ஆம் ஆண்டு அவரின் தலைமையில் சிறுபான்மை அரசு அமைக்கப்பட்டது.

எனினும், தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் முக்கிய திட்டங்களை நிறைவேற்ற அவர் எதிர்க்கட்சிகளை சார்ந்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் இன்னும் இரண்டு வருட ஆட்சிக் காலம் இருக்கும் நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து முன்கூட்டிய தேர்தலுக்கு ட்ரூடோ அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற தேர்தலில் லிபரல் கட்சியினர் தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் நிலையில் மூன்றாவது முறையாக வென்று கனடா பிரதமராக ட்ரூடோ பொறுப்பேற்கவுள்ளார்.

கனடா பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 338 இடங்களில் ஏதாவது ஒரு கட்சி 170 இடங்களைப் பிடித்தால் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியும். எனினும் ட்ரூடோ தலைமையில் லிபரல் கட்சி மீண்டும் பெரும்பான்மையை பெறத் தவறியுள்ளது. கடந்த தேர்தலில் ட்ரூடோவின் கட்சி 155இடங்களை மட்டுமே வென்று சிறுபான்மை அரசை அமைத்தபோதும் இம்முறை அதனை விட அதிக இடங்களை பெற்றுக்கொள்ளும் சாத்தியம் காணப்படுகிறது.



இந்நிலையில் அனைத்து கனடியர்களின் நலனுக்காக ஏனைய கட்சிகளுடன் இணைந்து பணியாற்றவுள்ளதாக தேர்தல் முடிவுகளின் பின்னர் ட்ரூடோ உறுதியளித்தார்.

தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியிலும் எங்களிடம் ஆட்சியை கனடியர்கள் ஒப்படைத்துள்ளனர். மில்லியன் கணக்கான கனடியர்கள் ஒரு முற்போக்கான திட்டத்தை தேர்ந்தெடுத்துள்ளனர் என செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ட்ரூடோ கூறினார்.

தேர்தலில் இதுவரை லிபரல் கட்சி 158 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. கன்சர்வேட்டிவ்கள் 119 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளனர். அத்துடன், பிளக் கியூபெகோயிஸ் 34 இடங்களிலும் என்.டி.பி. 25 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன. பசுமைக் கட்சி 2 இடங்களில் முன்னிலையில் உள்ளன. (ஐ)



## பெண் பிள்ளைகள் விரைவில் பாடசாலைக்கு திரும்பலாம்!

### தலிபான்கள் அறிவிப்பு

காபூல், செப். 22

ஆப்கானிஸ்தான் பெண்கள் விரைவில் பாடசாலைகளுக்கு திரும்பலாம் என்றும் இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் அந்த நாட்டின் கல்வித்துறை இணை அமைச்சரும் தலிபான் செய்தித் தொடர்பாளருமான ஜபிபுல்லா முஜாகீத் தெரிவித்துள்ளார்.

ஆப்கனின் பாஜ்வோக் செய்தி ஊடகம் ஜபிபுல்லா முஜாகீத் கூறினாரென இது தொடர்பான செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில், “நாங்கள் இதுதொடர்பான இறுதிக்கட்ட ஆலோசனையில் உள்ளோம். விரைவில் இது நடக்கும்”, என்று ஜபிபுல்லா கூறியிருக்கிறார்.

முன்னதாக கடந்த சனிக்கிழமை தலிபான்கள் வெளியிட்ட அறிக்கையில், திங்கட்கிழமை (அதாவது நேற்று முன்தினம்) முதல் ஆண் ஆசிரியர்களும், ஆண் பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு வர வேண்டும் என்று தெரிவித்தது. அப்போது பெண் ஆசிரியைகள் பற்றியும், பெண் பிள்ளைகள் பற்றியும் ஏதும் தெரிவிக்காததால் உலக நாடுகள் தலிபான்களுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தன.

ஆப்கானிஸ்தான் கடந்த 20 ஆண்டுகளாக கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தைக் கண்டிருந்தது. 2001 தொடங்கி பெண் கல்வி 17வீதத்தில் இருந்து 30வீதமாக ஏற்றம் கண்டுள்ளது. ஆரம்ப பாடசாலையில் 2001இல் பெண் பிள்ளைகள் எண்ணிக்கை பூச்சியமாக இருந்தது. 2018 இல் ஆரம்பப் பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் எண்ணிக்கை 25 இலட்சமாகக் காணப்பட்டது. உயர்க்கல்வி நிலையங்களில் பெண்களின் எண்ணிக்கை 2001இல் 5000 என்றளவில் இருந்தது, 2018 இல் அது 90 ஆயிரமாக அதிகரித்தது.

இத்தகைய சூழலில் தான் ஆப்கானில் தலிபான் ஆட்சி அமைந்தது. ஆரம்பத்தில் பெண் கல்விக்கு தடையில்லை என்று கூறிய தலிபான்கள் பின்னர் உயர் கல்வியில் பல கெடுபிடிகளை விதித்தனர். இதனால் பெண்கள் கல்வி பெறுவது தொடர்பில் குழப்பம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



### 7 தலிபான்கள் மரணமான

## ஆப்கானிஸ்தான் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்பு

ஜலலாபாத், செப். 22

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் 7 பேர் உள்பட 8 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஐ.எஸ். (இஸ்லாமிய தேசம்) பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள ஜலாலாபாத் நகரத்தில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமை தலிபான்கள் பயணித்த வாகனங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தலிபான்கள 7 பேரும், பொதுமகன் ஒருவருமாக 8 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஐ.எஸ். இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. அந்த இயக்கத்தின் ஊடகமான ‘ஆமக்’ செய்தி நிறுவனம் இத்தகவலை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசை அமைத்துள்ள தலிபான்கள் பொருளாதார, பாதுகாப்பு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர் இதனிடையே, ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தாக்குதல் தலிபான்களுக்கு நெருக்கடியை அதிகரித்துள்ளது. (ஐ)



## உலகின் மிக வயதான இரட்டை சகோதரிகள்

ரோக்கியோ, செப். 22

உலகில் வாழும் அதிக வயதான இரட்டைச் சகோதரிகளாக ஜப்பானை சேர்ந்த உமேனோ சுமியமா மற்றும் கூமே கொடமா ஆகிய இருவரும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

ஷோடோஷிமா தீவில் 1913ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி பிறந்த இவர்கள் இருவரின் வயது 107 ஆண்டுகள் 300 நாட்களைக் கடந்துள்ளது.

இதற்கு முன்னரும் ஜப்பானை சேர்ந்த இரட்டைச் சகோதரிகளான மறைந்த கின் நரிதா மற்றும் ஜின் கனீ ஆகியோர் சாதனை படைத்திருந்தனர். அந்த சாதனையை உமேனோ சுமியமா மற்றும் கூமே கொடமா ஆகியோர் முறியடித்துள்ளனர். தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இரு சகோதரிகளும் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு கின்னஸ் சாதனைச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்பட்டது.

உலகில் சராசரியாக அதிக ஆயுட்காலம் கொண்டவர்களாக ஜப்பானியர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டனில் தொற்றால் 75 இலட்சம் பேர் பாதிப்பு

லண்டன், செப். 22

இங்கிலாந்தில் கடந்த ஆண்டிலிருந்து தற்போது வரை கொரோனாவால் 75 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் சுகாதார துறை தெரிவித்துள்ளது.

உலகளவில் கொரோனா தொற்று தீவிரமாகியுள்ள நிலையில், பிரிட்டனில் 75.05 இலட்சம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் நேற்று முன்தினம் மட்டும் 22 ஆயிரத்து 533 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதேசமயம் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 553 பேர் தொற்றால் மரணமாகினர்.

இதேவேளை, 9.16 கோடி தடுப்பூசிகள் நாடு முழுவதும் வழங்கப்பட்டுள்ளன. 4.37 கோடி பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 3 தொன் ஹெரோயின் குஜராத்தில் சிக்கியது!

அஹமதாபாத், செப். 22

ஆப்கானிஸ்தானில் இருந்து கப்பல் மூலம் கடத்தப்பட்ட 3 தொன் ஹெரோயின் குஜராத்தில் சிக்கியது. இவ்வாறு கடத்தப்பட்ட ஹெரோயினின் மதிப்பு 19 ஆயிரத்து 900 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 53ஆயிரத்து 730 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தில் கப்பல் ஒன்றில் ஹெரோயின் கடத்தப்படுவதாக இரகசிய தகவல் இந்திய புலனாய்வு துறைக்கு கிடைத்தது. இதையடுத்து நடத்தப்பட்ட விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இரு கொள்கலன்களில் இருந்த ஹெரோயினும் பறிமுதல் செய்யப்பட்டன. (ஐ)

# பெங்களூரை பந்தாடியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்!



அபுதாபி, செப். 22

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 9 விக்கெட்கள் மற்றும் 10 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் அபார வெற்றியை பதிவு செய்துள்ளது.

ஐ.பி.எல். தொடரின் 31 ஆவது போட்டியில் நேற்று முன்தினம் இரவு அபுதாபியில் விராட் கோலி தலைமையிலான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

கொல்கத்தா அணியினரின் பந்து வீச்சுகளுக்கு தாக்கு பிடிக்க முடியாத பெங்களூர் அணி வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழந்து செல்ல, 19 ஓவர்களிலேயே சகல விக்கெட்களையும் பறிகொடுத்து 92 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. தேவ்தத் படிக்கல் மாத்திரம் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

கொல்கத்தாவின் பந்து வீச்சில் ரஸல் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், லோக்கி பெர்குசன் 2 விக்கெட்களையும், பிரசித் கிருஷ்ணா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

93 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தடிய கொல்கத்தா அணி ஆரம்பம் முதலே தனது அதிரடியான ஆட்டத்தை வெளிக்காட்டியது.

இதனால் 10 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 94 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. சப்மன் கில் 34 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, வெங்கடேஷ் ஐயர் 27 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பௌண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். வெற்றியின் இறுதித் தருவாயில் களமிறங்கிய ரஸல் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

போட்டியின் நாயகனாக வருண் சக்கரவர்த்தி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் பட்டியலில் ஏழாம் இடத்தில் இருந்த கொல்கத்தா ஆறு புள்ளிகளுடன் 5 ஆம் இடத்துக்கு முன்னேறியது. (ஐ)




# நியூசிலாந்து அணிக்கு வெடிகுண்டு மிரட்டல்!

லண்டன், செப். 22

நியூசிலாந்து மகளிர் அணி தங்கியுள்ள ஹோட்டலில் வெடிகுண்டு வைக்கப்படும் என்றும் அந்த அணி நாடு திரும்பும்போது விமானத்திலும் வெடிகுண்டு வைக்கப்படும் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து மகளிர் அணி தற்போது இங்கிலாந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றுள்ளது. இந்த நிலையில், அந்த அணியின் நிர்வாக உறுப்பினருக்கு மின்னஞ்சல் மூலம் இந்த மிரட்டில் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சலை இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் பெற்றுள்ளதுடன், நியூசிலாந்து அணியும் மிரட்டல் விடுக்கப்பட்டமையை நேற்று உறுதிப்படுத்தியது.

இதையடுத்து நியூசிலாந்து பெண்கள் அணியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# பாகிஸ்தானுடனான தொடரை இங்கிலாந்தும் இடைநிறுத்தியது!

லண்டன், செப். 22

பாதுகாப்பு அச்சுறுத்தலை காரணம் காட்டி பாகிஸ்தானுடனான தொடரை இடைநிறுத்துவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் அறிவித்தது.

பாகிஸ்தானுக்கு சென்ற நியூசிலாந்து ஆண்கள் அணி ஒருநாள், இருபது - 20 தொடர்களில் பங்கேற்க இருந்தது. ஆனால், முதலாவது ஒருநாள் போட்டி தொடங்க முன்னர் பாதுகாப்பை காரணம் காட்டி தொடரை நிறுத்தி விட்டு நாட்டை விட்டு வெளியேறியது.

இந்த நிலையில், 2005ஆம் ஆண்டின் பின்னர் முதன்முறையாக எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு செல்லவிருந்தது. இந்த நிலையிலேயே தொடர் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில், "பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து ஆடவர், மகளிர் கிரிக்கெட் அணிகள் ஒக்ரோபர் மாதம் ஒருநாள், இருபது20 தொடரில் விளையாட திட்டமிட்டிருந்தன. ஆனால், பாதுகாப்புக் காரணங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆலோசனையில் இந்தத் தொடரை இடை நிறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

எங்கள் அணியின் மனநல மற்றும் உடல்ரீதியான நலன் மிகவும் முக்கியமானது. அதிகமான முன்னுரிமை கொடுப்போம். ஆனால், தற்போது நாம் மிகுந்த இக்கட்டான சூழலில் வாழ்ந்து வருகிறோம். இந்தச் சூழலில் கொரோனா சூழல், பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்றவற்றோடு வீரர்களைப் பயணம் செய்ய அனுமதிப்பது மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும். பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடத்த ஏற்ற சூழலை உருவாக்க கடுமையாக உழைத்துவரும் பாகிஸ்தான் கிரிக் கெட் சபையை, எங்களின் இந்த முடிவு பாதிக்கும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

கடந்த இரு கோடை காலங்களிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எங்களுக்கு அளித்த ஆதரவையும், நட்பையும் மறக்கமாட்டோம். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துக்கு ஏற்பட்ட இந்த பாதிப்புக்கு நாங்கள் மன்னிப்பு கோருகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)






# தொடர்ச்சியாக 25ஆவது வெற்றி! இந்தியாவை வீழ்த்தி பதிந்தது ஆஸி.!

மெக்கே, செப். 22

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தில் 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணி தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒருநாள், மூன்று இருபது - 20, ஒரு டெஸ்ட் என மூன்று தொடர்களில் பங்கேற்கிறது இந்திய மகளிர் அணி.

முதல் ஒருநாள் ஆட்டம் மெக்கேவில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸி. அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மிதாலி ராஜ் தலைமையிலான இந்திய மகளிர் அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 225 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் மிதாலி ராஜ் 63 ஓட்டங்கள் எடுத்தார். ஷஃபாலி வர்மா 8 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். விக்கெட் காப்பாளர் ரிச்சா கோஷ் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களை எடுத்தார்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் டார்சி பிரௌன் சிறப்பாகப் பந்துவீசி 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்பிறகு துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி, சிறப்பாக விளையாடி 41 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 227 ஓட்டங்கள் எடுத்து முதல் ஒருநாள் ஆட்டத்தை எளிதாக வென்றது. தொடக்க வீராங்கனை 93 ஓட்டங்களும் அணித்தலைவர் மேக் லேனிங் 53 ஓட்டங்களும் எடுத்துக் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். தொடக்க வீராங்கனை அலிஸ்ஸா ஹீலி 77 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 25 ஆவது வெற்றியை அவுஸ்திரேலிய மகளிர் அணி பதிவு செய்தது. (அ)

# 73 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கு நீர் விநியோகத்தை நிறுத்த திட்டம்

*6 மாதங்களுக்கு மேல் கட்டணம் செலுத்தாத காரணத்தால்*

**கொழும்பு, செப்.22**

**ஆறு மாதங்களுக்கு மேலாக நீர் கட்டணத்தைச் செலுத்தாத சுமார் 73 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கான நீர் விநியோகத்தை நிறுத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தயாராகி வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் தீர்மானத்துக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நுகர்வோரிடமிருந்து பெறப்படவேண்டிய தொகை 145 கோடி ரூபாயாகும். எனினும், நுகர்வோர் தமது பட்டியல் கொடுப்பனவைச் செலுத்தாததால் சபை 800 கோடி ரூபாயை இழந்துள்ளது.

6 மாதங்களுக்கு மேலாக நீர் கட்டணங்களைச் செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி வழியாக தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

குறுஞ்செய்தி அனுப்பப்பட்டதன் பின் சுமார் 100 வாடிக்கையாளர்கள் கட்டணத்தைச் செலுத்தியுள்ளனர் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியால், நாடு முழுவதும் உள்ள பல ஹோட்டல்களும் நீர் கட்டணத்தைச் செலுத்தவில்லை.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு மாதந்தோறும் 200 கோடி ரூபாய் செலவு ஏற்படுவதால் வாடிக்கையாளர்கள் தமது கட்டணங்களை விரைவாகச் செலுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ)



# கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் சிக்கினார்

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு, புன்னக்குடா தளவாய் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட வந்த ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா தளவாய் பகுதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டனர்.

சோதனைகளின்போது ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா தளவாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 7 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (இ)

# பொலிஸ் அதிகாரியை தள்ளிவிட்டு காரில் தப்பி சென்றவர்களை தேட வலைவீச்சு!

கொழும்பு, செப். 22

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பொலிஸ் அதிகாரியைத் தள்ளிவிட்டு காரில் தப்பிச் சென்றவர்களைக் கைதுசெய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் நான்கும், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரு குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்ட விசேட காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நுகேகொடை ஊழல், மோசடி தடுப்புப் பிரிவினர் இணைந்து வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப் பொருள் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் ஒட்டோவில் இருந்த நபர்கள், சந்தேகத்துக்கிடமான முறையில் செயற்படுகின்றனர் என்பது உறுதியானதையடுத்து அவர்களைச் சோதனைக்கு உட்படுத்த முயன்றபோது காரில் இருந்த நபர்கள் பொலிஸ் அதிகாரிகளை மோதி விட்டுத் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது பொலிஸ் அதிகாரி ஒருவர் காரின் முன்பக்க பொனட்டைப் பிடித்து காரை நிறுத்துவதற்கு முயற்சித்துள்ளார்.

எனினும், காருக்குள் இருந்த நபர்கள் காரை செலுத்திச் சென்றுள்ளதுடன் சிறிது தூரம் சென்று வேகத்தடையை அழுத்தியபோது பொலிஸ் அதிகாரி கீழே விழுந்துள்ளார்.

இதையடுத்து காரில் இருந்த நபர்கள் காரைச் செலுத்திக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் நான்கும் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இரு குழுக்களும் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கீழே விழுந்து காயமடைந்த பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று இவ்வாறான சுற்றிவளைப்புகளின் பொலிஸ் அதிகாரிகள் பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.

இதுபோன்ற அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் தினமும் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விசேட சுற்றிவளைப்புகள் பொலிஸாரால் எக்காரணம் கொண்டும் இடைநிறுத்தப்படாது என்பது நினைவில்கொள்ள வேண்டும்" - என்றார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 01 - 07 - 1950



உதிர்வு 21 - 09 - 2021

**திருமதி சின்னத்தங்கச்சி சந்திரலிங்கம்**

மயிலிட்டி யார்மையைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி உடுவில் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி சந்திரலிங்கம் நேற்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி சந்திரலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - நாச்சன்பிள்ளையின் அன்பு மகளும் அ.கிருஷ்ணவேணி (சட்டத்தரணி), ச.பராபரன் (பொறியியலாளர்), ஜெ.நீலவேணி(தொழில்நுட்ப அலுவலர் நகரசபை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ச.அருள்நாதன்(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ப.யசோதினி, கு.ஜெயகோபன்(பதவி நிலைத் தொழிநுட்ப அலுவலர் - வவுனியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெ.ஜனுதன், ஜெ.சிவனுஜன், ஜெ.அபிஷாலினி, அ.பவிஷாஜினி, அ.நிவிஷன், அ.டக்ஷாவினி, ப.அக்ஷிதா, ப.சக்தி அபிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2021) புதன் கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
077 077 3694
077 016 7064

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கலைப்பீடத்தின், சட்டத்துறையில் பயில்வதற்காக, 2019 - 2020 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு, நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.



சட்டத்துறைத் தலைவர் திருமதி துஷானி சயந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், கலைப்பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ்உமேஷ், பதில் நூலகர் திருமதி ச.கல்பனா ஆகியோர் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினர்.

மாணவர் ஒழுக்காற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் கே.வேலாயுதமூர்த்தி, சட்டத்துறை விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள், புதுமுக மாணவர்கள் உட்பட பலர், நிகழ்நிலை ஊடாக நிகழ்வில் பங்கேற்றனர். (இ - 03)

## இறுதிப்போர்...

ஆப்கானிஸ்தானில் அந்த மக்கள் கதறி அழுகின்றபோது விமானம் விட்டு ஏற்றுகின்றார்கள். சர்வதேச ஊடகங்கள் அதனை வெளியே கொண்டு வருகின்றன. ஆனால், நாங்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டபோது சர்வதேசம் மௌனம் காத்தது. எங்களுக்கு யாரும் விமானம் அனுப்பவில்லை. யாரும் கப்பல் அனுப்பவில்லை என்றும் சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை (இன்று) ஐ.நாவில் உரையாற்றவுள்ளார். அவர் ஐ.நாவின் செயலாளருடனும் பேசியுள்ளார். அப்போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாக கூறியுள்ளார். இந்த நாட்டிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்றால் அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வடக்கில் சகல இடங்களிலிருந்தும் மக்கள் விரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள். இவர்களில் பலர் தங்களுடன் வந்த பிள்ளைகளை, கணவன்மார்களை, தாய்,தந்தையரை, சகோதர, சகோதரிகளை கண் கண்ட சாட்சியமாக ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைத்தார்கள்.

ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் கண் கண்ட சாட்சியமாக ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்விக்கு மரண சான்றிதழ் வழங்குவதுதான் இந்த நாட்டின் ஜனாதிபதியின் பதிலா? அப்படியானால் இந்த நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் கொலை செய்யப்பட்டுவிட்டார்களா?அவர்களுக்கு என்ன நடந்தது? இன்றும் கூட கிட்டத்தட்ட 60 இற்கும் மேற்பட்ட தாய்,தந்தையர் தங்களுடைய பிள்ளைகள் வருவார்கள் என்ற ஏக்கத்தோடு இறந்திருக்கின்றார்கள். இதனைவிட ஆயிரக்கணக்கான தாய், தந்தையர் இன்றும்தமது பிள்ளைகளின் வரவுக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் ஐ.நாவுக்கு போய் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நான் காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ் கொடுக்கின்றேன் என்று கூறுகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அண்ணா மஹிந்த ராஜபக்ஷ, அப்போது ஜனாதிபதியாக விருந்தபோது அப்போதிருந்த ஐ. நா. செயலர் பான் கீ மூ னிடம் நாங்கள் நீதி வழங்குகிறோம், பொறுப்புக்கூறுகின்றோம் என்று கூறினார். ஆனால், இதுவரை எதுவும் நடக்கவில்லை. இந்த அரசு மிக மோசமான முறையில் மக்களை பிழையான வழியில் கொண்டு செல்ல முனைகின்றது. நாங்கள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளோம். 2008 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் இருந்த மக்கள் இதே ஐ.நா. சர்வதேச நிறுவனங்களுக்கு முன்னால் சென்று எங்களை விட்டுப்போகாதீர்கள் என்று கையெடுத்து கும்பிட்டு அழுதார்கள். நீங்கள் போய்விட்டால் எங்களை படுகொலை செய்வார்கள். எங்களை இந்த இலங்கை அரசு கொல்லப் போகின்றது. தயவு செய்து போகாதீர்கள் என்று மன்றாடினார்கள். அப்போது பான் கீ மூன் இருந்தார். எமது மக்கள் போகாதீர்கள் எங்களை காப்பாற்றுங்கள் என்று கண்ணீரோடு கேட்டார்கள். ஆனால், எங்களை நடுத்தெருவில் விட்டு சென்ற ஐ.நா. சபையின் ஒவ்வொரு சர்வதேச நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டும். என்ன நடந்தது என்பதனை ஆராய வேண்டும். இதனை நான் இந்த சபையின் ஊடாக தற்போதுள்ள ஐ.நா.வின் செயலரிடம் விநயமாக முன்வைக்கின்றேன்.

உலகப்பந்தில் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய வகையில் பெரும் இனப்படுகொலை இலங்கையின் வடக்கின் முள்ளிவாய்க்காலில் நடை பெற்றது. இதனை உலகம் ஏற்றுக்கொள்கின்றது. இவ்வாறான ஒருசூழலில்தான் இன்று ஐ.நா. சபைகூட மாறி விடுமோ என்ற அச்சம் எங்களுக்குண்டு.

நாங்கள் ஒவ்வொரு தலைவர்களும் வருகின்றபோது தருகின்ற ஒவ்வொரு உறுதிமொழிகளையும் நம்புகின்றோம். எதாவது நடக்கும் என்று நினைக்கின்றோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை. இந்த நாடு, நாயகத்தை மதிக்கும்நாடு என்று நீங்கள் கூறுகின் றீர்கள். இந்த நாடு நீதியான நாடு என்கிறீர்கள். அப்படியானால் இந்த நாட்டில் என்ன நடந்திருக்கின்றது? இழந்த உயிர்களுக்கு,வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுதானா உங்கள் நீதி?

நாங்கள் இலங்கை இராணுவத்தாலும் இலங்கை படைகளாலும் படுகொலை செய்யப்பட்டோம்.அப்போது இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அப்போதைய பாதுகாப்பு செயலராக இருந்தார். அவர்தான் இவ்வளவு விடயங்களுக்கும் தலைமைவகித்தார். ஆகவே இன்றுள்ள சர்வதேச சமூகம் இதனை ஒரு நேரான வழியிலே சிந்திக்க வேண்டும்.எங்களுக்குநீதிகிடைக்க வேண்டும். அது எங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்.

உள்ளக விசாரணை செய்கின்றோம் என்கிறீர்கள். இதற்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என்கிறீர்கள். சுட்டவர்கள் நீங்கள், பொஸ்பரஸ் குண்டுகளை வீசி கொலை செய்தவர்கள் நீங்கள். கொத்தணிக்குண்டுகளை வீசிக்கொன்றவர்கள் நீங்கள். 4 இலட்சம் மக்கள் இருக்கும் போது 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் எனக் கூறி உணவு அனுப்பியவர்கள் நீங்கள். பட்டினியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். குழந்தைகள் கஞ்சிக்காக வரிசையில் நிற்கின்றபோது கொன்றது நீங்கள். அனைத்து கொலைகளையும் செய்தது நீங்கள். நீங்களே இந்த கொலைகளை விசாரிப்பது என்றால் அது என்ன நியாயம்? கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பதுதான் இந்த உலகின் நீதியா? இந்த நீதியை நம் கேட்கவில்லை.

நாங்கள் கேட்பது ஒரு சுயாதீனமான, நியாயமான பாதிக்கப்பட்ட மக்கள் நம்பக்கூடிய இங்கு நடந்த படுகொலைகளை நிருபிக்கக்கூடிய நேர்த்தியானதொரு விசாரணையே.அந்த விசாரணை ஒரு சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும் -என்றார்.

## விகிதாசார...

பலவீனமாக்கி நாட்டை சர்வதிகார போக்கில் மென்மேலும் கொண்டு செல்ல ஒரு போதும் இணங்கவோ, இடமளிக்கவோ முடியாது. இந்த வரலாற்று தவறு உங்கள் தலைமையில் ஏற்பட்டது என்ற பழிச்சொல் உங்கள் மீது விழாமல் தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கவனமாக செயல்பட வேண்டும் என நேற்று தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக்குழுவில் சாட்சியம் அளித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரி வித்தார்.

மேலும், நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த தேர்தல் முறை மாற்றம் எமது ஆட்சிகாலத்தில் கலப்பு முறைக்கு பரீட்சார்த்தமாக மாற் றப்பட்டது. ஆனால், அந்த மாற்றம் உள்ளூராட்சி மன்றங்களில் நிலையான ஆட்சிக்கு வழிகாட்டவில்லை. அத்துடன் உள் ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நாடெங்கும் ஏறக்குறைய அறுபது முதல் எழுபது விகிதம் அதிகரித்தது. ஆனாலும், குழப்ப நிலைமையே ஏற்பட்டது.

இந்நிலையில், இதே விதமான குழப்ப நிலைமையை மாகாணசபை, பாராளுமன்றங்களிலும் ஏற்படுத்தி ஜன நாயகத்தை குழி தோண்டி புதைக்க வேண்டாம். அனைத்து இன மற்றும் சமூக குழுவினர்களும் பிரதிநிதித்துவம் செய்ய இடந்தரும் வண்ணமும், பெரிய, சிறிய கட்சிகள் தாம் பெறுகின்ற வாக்கு தொகைகளுக்கு ஏற்ப பிரதிநிதித்துவங்கள் பெறும் வண்ணமும், உள்ளூராட்சி, மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல்கள் முழுமையான விகிதாசார முறைமையின் படியே நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணித்து சமநிலைபடுத்தும் நிறுவனங்களாக ஜனநாயகத்தின் பேரில் பாராளுமன்றமும், மாகாணசபைகளும் செயற்பட முடியும்” என்றார்.

## பயங்கரவாத...

மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தவர், மேலும் கூறியவையாவன,

கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அந்த சிறைச்சாலையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை ஓரிடத்திற்கு வருமாறு அழைத்து, அவருக்கு முன்பாக முழந்தாளில் இருக்குமாறு கட்டளையிட்டு, அச்சுறுத்தி அவர்களின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டியுள்ளார்.

அந்தக் கைதிகள் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே ஆகும். 2009 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ள அவர்கள். எவ்வித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட வில்லை. அவர்களுக்குரிய வழக்குகளும் முறையாக நடத்தப்படுவதில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தினர் முறையாக ஆஜராகியிருந்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பர். வேண்டுமென்றே இவர்கள் பயங்கர வாத தடைச்சட்டத்தில் வைக்கப்பட் டுள்ளனர். இன்று இவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசாங்கமும், சட்டமா அதிபர் திணைக்களமும் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இதேவேளை கடந்த 26 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் 29 ஆம் திகதி இவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் 541 நாட்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் கீழ் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களிடம் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் ஊடாக வாக்குமூலம் பெற வேண்டும் என்ற போதும் அவ்வாறு இன்றியே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்து 540 நாட்களின் பின்னர் மறியல் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் மூன்று நாட்களின் பின்னர் மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்படும் போது நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், மறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்படும் போது போதைப் பொருள் இருக்கின்றது என்று சோதனை நடத்தப்படுகின்றது என்றால் எப்படி அவர்களால் அதனை கொண்டு சென்றிருக்க முடியும். அப்படியென்றால் அதிகாரிகள்தான் அதனை கொடுத்திருக்க வேண்டும். அதன்படி தினமும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களை வீதியில் வைத்து நிர்வாணமாக்கி சோதனையிட வேண்டும். அவ்வாறு செய்யாது கைதிகளை இப்படி நடத்துவது இது பாலியல் சித்திரவதை நடவடிக்கை என்று கூறுவதுடன், இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்கின்றோம் - என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

ளர்கள் இனங்காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 163 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், யாழ். போதனா மருத்துவமனையில் 25 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேர், ஊர்காவற்றுரை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என்று யாழ். மாவட்டத்தில் 31 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 6 பேர், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 3 பேர், மன்னார் பொது மருத்துவமனையில் 2 பேர், வவுனியா செட்டிக்குளத்தில் ஒருவர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

தவிர, பலாலி விமானப் படை முகாமில் 8 பேரும், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 4 பேரும், இரணைமடு விமானப் படை முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

## வடக்கில்...

விக்கையில்-

வடக்கு மாகாணத்தில் தற்போது கொரோனா தடுப்பூசி வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகளில் முதலாவது தடுப்பூசி இதுவரை 559,129 பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 86 சதவீதமாகும். இதேபோன்று இரண்டாவது தடுப்பூசி 449,524 பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது 70 சதவீதமாகும்.

இதுவரை 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 88,000 பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த தொகையிலே 40,000 இற்கு மேற்பட்டோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இலங்கை முழுவதிலும் தடுப்பூசி போடாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகம் உயிரிழந்தனர். எனவே இந்த தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களை உடனடியாக வந்து பெற்று தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் -என்றார்.

## நேற்று 1,351...

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 7 ஆயிரத்து 330 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,047 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 34 ஆயிரத்து 140 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## வல்வெட்டிதுறை...

கூட்டமைப்பு) சார்பில் கந்தசாமி சதீஸ், சுயேச்சை குழுவை சேர்ந்த ச. செல்வேந்திரா ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

17 உறுப்பினர்கள் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 7, சுயேச்சை குழு 4, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தலா 2, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஒரு உறுப்பினர்களை கொண்டுள்ளன.

முன்னதாக வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் கோ. கருணானந்தராசா கடந்த ஜூலை 31ஆம் திகதி பதவி விலகினார். இதைத் தொடர்ந்து கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதி காலமானார். இந்த நிலையில், அவரின் வெற்றிடத் துக்கு புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## அமைச்சர்...

கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அடிமட்டத்தில் உள்ள அரசியல்வாதிகளை ஒரு சில அமைச்சர்கள் தங்களின் அதிகாரத்தை பிரயோகித்து தாக்குவது வெறுக்கத்தக்க விடயமாகும்.

தற்போதும் இந்நிலையே காணப்படுகிறது.மக்களின் பிரச்னைகளையும், ஊழல் மோசடிகளையும் சுட்டிக்காட்டும்போது ஆளும் தரப்பின் அரசியல்வாதிகள் அதற்கு எதிராக செயற்படுகிறார்கள்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் அமைச்சரவை மட்டத்தில் எடுத்த தீர்மானத்தை கேள்விக்குள்ளாக்கி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டு அரசாங்கத்தையும்,கட்சியையும் சரத் வீரசேகர நெருக்கடிக்குள்ளாக்கினார்.

இப்பிரச்னைகள் அனைத்தையும் ஜனாதிபதியிடம் ஆதாரபூர்வமாக குறிப்பிட்டுள்ளேன். விரைவில் சிறந்த தீர்மானம் கிடைக்கப் பெறும்-என்றார்.

ஈழநாடு
Eelanadu




## அரிசி விலையை உயர்த்த யோசனை!

கொழும்பு, செப். 22

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டை போக்கவே இந்தக் கோரிக்கை யோசனையாக முன்வைக்கப்படுவதாக ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

### அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல்:

# சபையில் இன்று விசேட பிரேரணை

கொழும்பு, செப். 22

**அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பில் பாராளுமன்றத்தில் இன்று விசேட பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.**

சிறைச்சாலை மற்றும் கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த லொஹான் ரத்வத்த, தனது பதவி நிலை அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த 12ஆம் திகதி மாலை 6 மணியளவில் நிறை போதைக்குள்ளான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தனக்கு முன் கொண்டு வந்து நிறுத்துமாறு பணித்திருந்தார்.

அதற்கமைய அவருக்கு முன் முழந்தாழிட்டு நிறுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளது தலையில் அவர் துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுத்திருதார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரச்னை குறித்து பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் 27 (2) இன் கீழ் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியால் சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரேரணை இன்று சபையில் முன்வைக்கப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# 5 வயது பெண் குழந்தை பாலியல் துஷ்பிரயோகம்

### 20 வயது இளைஞர் 72 மணிநேர தடுப்பு காவலில்

கொழும்பு, செப். 22

நுகேகொடை பிரதேசத்தில், ஐந்து வயது எட்டு மாதங்களேயான பெண் குழந்தையைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை 72 மணித்தியாலங்கள் தடுப்புக்காவலில் வைத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெண் குழந்தையின் அயல்வீட்டுக்காரரே கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

20 வயதுடைய சந்தேகநபரை, நுகேகொட பிரதேசத்தில் வைத்து, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினர் இணைந்து கைதுசெய்தனர்.

சந்தேகநபர், சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதுடன் அதனைக் காணொளியாக பதிவு செய்து அவரது நண்பர்களுக்கு சமூக ஊடகங்களினூடாக அனுப்பியுள்ளார்.

விசேடமாக நாம் பெற்றோரிடம் ஒரு விடயத்தைக் கோருகின்றோம். உங்களது பொறுப்பில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக இருங்கள்.

வீட்டிலிலுள்ள குழந்தைகள் எங்கு செல்கின்றார்கள், யாருடன் பழகுகின்றார்கள், யாருடன் தொடர்பில் இருக்கின்றார்கள் என்பது தொடர்பில் 24 மணித்தியாலங்களும் அவதானத்துடன் இருப்பது அவசியம்" - என்றார். (இ)

# உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்க வேண்டும்." என்று சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, சகல மாணவர்களுக்கும் பைசர் தடுப்பூசி வழங்க ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்" என்றார்.

# இலங்கையின் பெரும் பகுதி சீனாவுக்கு தாரைவார்ப்பு!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 22

"2020ஆம் ஆண்டு முதல் தற்போது வரை வெளிநாட்டிலிருந்து வந்த வைரஸால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் ராஜபக்ஷ உறவினர்களால் வந்த வைரஸால் மக்கள் இரண்டாவது முறையாக பாதிக்கப்பட வேண்டி இருக்கின்றது. நாட்டின் பெரும்பகுதி சீனாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜபக்ஷ அரச தரப்பினர் சங்ரிலா ஹோட்டல் பகுதி, துறைமுக நகர பெரும் பகுதி ஆகியவற்றை சீனாவுக்கு வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்க பிரஜாவுரிமை கொண்டவர்கள். நாட்டின் சொத்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்கின்றனர்.

இதன் உச்சமாக கடந்த வாரத்தில் இந்த நாட்டின் மொத்த மின் உற்பத்தி நிலையங்களினதும் உரிமத்தை வெளிநாட்டவர்களுக்கு ஒப்படைத்துவிட்டனர்.

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகள் திறைசேரிக்குச் சொந்தமானவை. 23.9 சதவீத பங்குகள் ஊழியர் சேமநல நிதியத்துக்குச் சொந்தமானவை.

இந்த நாட்களில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகள் இடம்பெறுகின்றன.

இந்த அரசு சங்கைக்குரிய தேரர்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது. இந்த அரசைப் போன்று பொய் கூறும் ஓர் அரசைப் பார்த்ததில்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கூறுகின்றார். ஜனாதிபதி ஐ.நாவிலிருந்து வந்து சிறைக்கைதிகளை விடுதலை செய்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை" - என்றார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நிமிர்ந்து நில்,ஐந்தாம் படை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு